# எனது ஊர் காரை நகர்

www.karaiNEWS.com

இதழ் 29

கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. இலவசம். தொலைபேசி : + 1 416 821 8390

## ‘ காரைநகர் சேவையாளர் கௌரவம் ’
## New Star கல்வி நிலையம், புதுறோட், காரைநகர்

**05.01.2025**




























### உள்ளே...

- 1973 பொன்னகவை மாணவர்களின் கனவு... ☆
- தீவு ஒன்று நகரான கதை... ☆
- ஐங்கரன்.. என்னும் ஊரவன்... ☆
- எங்கள் ஊரின் MGR ஒரு வரலாற்று நாயகன்... ☆
- கல்விப்பணியில் ‘எனது ஊர் காரைநகர்’... ☆
- அம்பாள் முன்பள்ளிக்கு புதிய கட்டிடம்... ☆
- நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 12 இலட்சம்... ☆
- Prof வே.தர்மரட்ணம் அறக்கட்டளை அங்குரார்ப்பணம்... ☆










**‘எனது ஊர் காரைநகர்’**
**வெளியீடு பிரதான அனுசரணை:**
Dr.V.Vijayaratnam M.D Canada



CLEARREX
WINDOWS & DOORS MANUFACTURING INC.

*At Clearrex, we serve to homeowners, renovators, builders and dealers.*

*We are located in Burk's Falls and are serving customers throughout Northern Ontario.*



***Contact:***
**Mahadevan Balasubramaniam**
***Cell: 416-716-7052***

***567, HIGH STREET, BURKS'S FALLS, ONTARIO, P0A 1C0, CANADA***
***TEL: 705 382 9090 FAX: 705 382 0990***
***Email: mo@clearrex.com*** ***http://clearrex.com***

**DOUBLE SEAL INSULATING GLASS LTD.**

Manufacturing high performance insulating glass units for commercial and residental use.



***Contact:***
**MO BALASUBRAMANIAM**

***3530 Nashua Drive, Mississauga, ON. L4V 1L2***
***TEL: 905-672-3232 FAX: 905-676-9449***
***Email: mo@doubleseal.ca*** ***www.doubleseal.ca***





**Sell your home for top dollars**
**Buy Your Home For Less $$$**

- FREE home market evaluation
- Free home staging
- Professional photo & virtual tour
- Just listed & sold flyer distribution
- Social media marketing
- Install sale & directions sings
- Email / e-flyers & weekly adverising
- Weekly open house

#1 RE/MAX
OUTSTANDING AGENT FOR OUTSTANDING RESULTS



**RE/MAX**
**Excel Realty Ltd., Brokerage**
Independently owned and operated
Bus: **905-475-4750**
Fax: 905-475-4770
50 Acadia Ave #120,
Markham, ON L3R 0B3

Honest, Knowledgeable & Professional Service
**in Your Neighborhoods Full Time Realtor**
**Raj Nadarajah**
Sales Representative
**Dir: 416-333-6115**



*With the best wishes from*

# Dr. V. Vijayaratnam, M.D.

**FRCP, M.R.C.P.(UK), D.C.H.(Lond), D.C.C.H.(Edin.)**
**Pediatrics, Gastroenterology and Nutrition**





**Two Locations to Serve You**

| DOWNTOWN | SCARBOROUGH |
|---|---|
| 600, Sherbourne Street, Suite 711 | 3430, Finch Avenue East |
| Toronto, ON. M4X 1W4 | Scarborough, ON. M1W 2R5 |
| TEL: 416-929-0929 | TEL: 416-496-1990 |

## ஆக்கியோன் மனதிலிருந்து...

'எனது ஊர் காரைநகர்' இதழ் 29 தற்போது உங்கள் கைகளில்... 2006ம் ஆண்டு முதல் காரைநகர் செய்திகளை கனடா வாழ் காரைநகர் மக்களிற்கும் ஆர்வமுள்ள பல தேச மக்களிற்கும் தெரிவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட 'எனது ஊர் காரைநகர்' செய்தி சஞ்சிகையும் www.karainews.com இணையத்தளமும் கடந்த 18 ஆண்டுகளில் காரை மண்ணின் வாசத்தை பரப்பி வந்துள்ளதுடன் அவ்வப் போது புயல்களையும் கிளப்பி வந்துள்ளது.

2005ம் ஆண்டு யுத்த காலத்தின் போது, வனவாசம் பூண்ட காரைநகரின் கோலங்களை தெரிவிவித்த போது ஆவலுடன் காரைநகர் காட்சிகளையும் செய்திகளையும் எதிர்பார்த்த உலகளாவிய காரைநகர் மக்கள் 2009ம் ஆண்டுக்கு பின்னர் படிப்படியாக ஊரை நோக்கி பயணிக்க தொடங்கியதன் பின்னர் ஊரின் அபிவிருத்தி தொடர்பாகவும் கிலாகித்துக்கொள்ள முயன்றார்கள்.

செய்திப்பணிகளில் தொடங்கிய 'எனது ஊர் காரைநகர்' கடந்த 18 ஆண்டுகளில் செய்திகளோடு செய்தவைகளும் எண்ணிலடங்காதவைகளாக கடந்த 18 ஆண்டுகளில் வெளிவந்த 29 இதழ்களும் கட்டியம் கூறி நிற்கும். ஆரம்ப கல்வியில் தொடங்கி அட்வான்ஸ் லெவல் ஊடாக பல்கலைக்கழக கல்வி வரை மட்டுமன்றி, ஊர்ப்பணிகளில் உலவாரப்பணியுடன் தூர்வார்ந்த துணிகரமான செயற்பாடுகள் பலவுள.
கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பதற்கு இணங்க சொல்லிச் செய்தவைகளும் சொல்லாமல் செய்தவைகளும் ஏராளம் ஏராளம்.

சொந்த செலவிலும் சேர்ந்து செய்த செலவிலும் காரை மண் கண்டு கொண்டவைகள் பல. கண்டவர்களும் விண்டவர்களும் சொன்னால் தான் புரியும் என காத்திருக்கவும் காலம் விட்டு வைக்கவில்லை.
ஊடகங்கள் உள்ளங்கைகளில் வந்த பின்னரும் உயிரோடும் உணர்வோடும் 'எனது ஊர் காரைநகர்' ஊரிற்கான பணிகளில் உத்வேகத்துடன் செயற்படுகின்றது.
செய்தால் தான் தெரியும், சொன்னால் தான் புரியும் என்பதற்கு இணங்க சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் 'எனது ஊர் காரைநகர்' காலத்தின் தேவையறிந்து மேடையேறியது.

புயல் அடித்தால் செய்தியாக பார்ப்பவர்களிற்கு மத்தியில் அதன் பாதிப்புக்களிற்கு பயன் தேடித்தருவதும், தேடி வரும் உதவிகளிற்கு தேவையானதை வழங்குவதும் உலகளாவிய ஊர் மன்றங்களிற்கு இணையாக ஊர்ப்பணிகளில் 'எனது ஊர் காரைநகர்' கடந்த 18 ஆண்டுகளில் நிர்வாக சிக்கலின்றி நிறைவேற்றியவை எண்ணில் அடங்காதவை. அவற்றிற்கெல்லாம் ஆதரவு வழங்கியவர்களை அவ்வப்போது தெளிவாகவும் விளக்கமாகவும் தெரிவித்து வந்துள்ளது 'எனது ஊர் காரைநகர்'

தெருவில் தேங்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு உடைக்கும் பணியை ஒரு போதும் 'எனது ஊர் காரைநகர்' செய்தது இல்லை. செய்யப்போவதும் இல்லை... சொல்ல வேண்டிய செய்திகளை சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டிய தருணத்தில் சொல்லவும், செய்ய வேண்டிய செயற்பாட்டை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யவும்,செயற்படுத்தவும் ஒரு போதும் தயங்கியதும் இல்லை.

காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ற வகையில் காரைநகர் மக்களுடன் பயணித்து ஊர் மண்ணின் வாசத்தை உணர்வோடும் உண்மையோடும் வெளிப்படுத்தி வரும் 'எனது ஊர் காரைநகர்' காரை மண்ணின், காரை மக்களின், காரை மண்ணின் கலாசாரத்தை என்றென்றும் காப்பாற்றி தொடர்ந்து வீறுநடை போடும் என்பதை 18வது ஆண்டில் 29வது இதழ் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.




**www.karainews.com**

**' எனது ஊர் காரைநகர் '**

**தொகுப்பாளர்: தீசன் திரவியநாதன்**

331 Trudelle Stree, Unit 34
Toronto, Ont. M1J 3J9
Canada

Email: theesan@karainews.com

**TEL: 416 821 8390**

# காரைநகர் சேவையாளர் கௌரவம்
# 2025.01.05

"எனது ஊர் காரைநகர்" www.karainews.com உடன் காரைநகர் அபிவிருத்தி சபை இணைந்து கடந்த மூன்று தடவைகள் காரைநகரில் காரை மண்ணிற்கும் மக்களிற்கும் சேவையாற்றிய பலரையும் கௌரவித்துள்ளது. அந்த வகையில் நான்காவது தடவையாக 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை மேலும் நான்கு சேவையாளர்களை கௌரவிக்கவும் அவர்களை மதிப்பளித்து அவர்களது கடந்த கால சேவைகளை எதிர்வரும் சந்ததிகள் அறிந்து கொள்ளும் வகையில் கௌரவிக்கவுள்ளது. **05.01.2025** அன்று மதிப்பளித்து கௌரவிக்கப்படவுள்ள 'காரைநகர் சேவையாளர்கள்" வருமாறு:



**திரு. சிதம்பரப்பிள்ளை நேசேந்திரம்**
கருணையுடன் கூடிய கல்விப்பணி



**திரு.கந்தசாமி இராஜசந்திரன்**
சமூக அக்கறையுடன் கூடிய பொதுப்பணி



**Dr,S சுவாமிநாதன்**
மனித நேயத்துடன் மருத்துவம்



**சைவமணி செல்வரத்தினம் சண்முகரத்தினம்**
ஆன்மீகம், சைவசமயப்பணி

போரிற்கு பின்னர் மீண்டும் காரைநகர் துரித கதியில் சமூக நிலை பெறவும் மீண்டும் காரை மக்கள் தமது அன்றாட அத்தியாவசிய தேவைகளான கல்வி , சுகாதாரம், மருத்துவம் , விவசாயம் , ஆன்மீகம் , கலை, அரசியல் , பொதுப்பணி , அரச பணிகள் என்பவற்றில் தமது தேவைகளிற்கும் கடமைகளிற்கும் அப்பாற்பட்டு காரை மக்களின் நலன்களில் அதீத அக்கறை கொண்டு மேலும் ஒரு படி முன்னிலையில் தமது பணிகளை நிறைவேற்றியவர்களை இனம் கண்டு மதிப்பளித்து கௌரவித்துள்ளது. கடந்த மூன்று தடவைகளில் நடைபெற்ற காரைநகர் சேவையாளர்கள் கௌரவித்து மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

முதன் முறையாக 2017.12.31 அன்று காரை மண்ணின் போரிற்கு முந்தைய பணியாளர்கள் உட்பட 20 காரை மண்ணின் சேவையாளர்கள் மணற்காட்டில் அமைந்திருந்த காரைநகர் அபிவிருத்தி சபை காரியாலயத்தில் திரு.சிவா தி. மகேசன் தலைமையில் பேராசிரியர் வே. தர்மரட்ணம் கலந்து கொள்ள நடைபெற்ற நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

இரண்டாவது முறையாக 2020.01.05 அன்று புதுறோட் சந்தியில் அமைந்துள்ள New Star கல்வி நிலையத்தில் நிலைய அதிபர் திரு.நிமலன் கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமயில் வடமாணாக கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள் கலந்து கொள்ள 10 சேவையாளர்கள் கௌரவித்து மதிப்பளிக்கப்பட்டனர்.

மூன்றாவது முறையாக 2023.01.01 அன்று முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர் திரு.வி.மணிவண்ணன் கலந்து கொள்ள 7 காரைநகர் சேவையாளர்கள் மதிப்பளித்து கௌரவிக்கப்பட்டனர்.

மேலும்.. ⇨

## 2017.12.31 அன்று மதிப்பளித்து கௌரவிக்கப்பட்ட " காரைநகர் சேவையாளர்கள் "வருமாறு:

1. மருத்துவர் சுப்பிரமணியம் நடராசா (மருத்துவ பணியுடன் நூலகப்பணி)
2. வே.முருகமூர்த்தி (ஆசிரியர், முன்னாள் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர்)
3. பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை (ஆசிரியர், சமய, தமிழ் பணி)
4. பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் (முன்னாள் காரை கோட்ட கல்வி அதிகாரி, கல்விப்பணி)
5. K.M.செல்வரத்தினம் (KMS) – ஆங்கில ஆசிரியர் காரை இந்து 27 வருடங்கள்
6. த.ஜெயசீலன் (முன்னாள் காரைநகர் பிரதேச செயலர்)
7. வே.சபாலிங்கம் ( சிரமதானம், பொதுப்பணி)
8. இ.திருப்புகழூர்சிங்கம் (ஆசிரியர், கிராம சேவையாளர், பொதுப்பணி)
9. இ.இராசதுரை (கிராம சேவையாளர், பொதுப்பணி)
10. திருமதி வாசுகி தவபாலன் (காரை இந்து அதிபர், சமூகப்பணி )
11. இ.சிறிதரன் (ஊரி அ.மி.த.க.பாடசாலை அதிபர்)
12. திரு.திருச்செல்வம் தவரட்ணம் (ஆசிரியர்)
13. பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்
14. கை.நாகராசா (சமூக பொதுப்பணியாளர்)
15. திரு.து.நாகேந்திரம் (மணிவாசகர் சபை)
16. ந.கிருஷ்ணபவன் (ஆசிரியர்)
17. திரு.எஸ்.கே.சதாசிவம் (விளையாட்டு துறை, பொதுப்பணி )
18. திருமதி நடராசா இராசமலர் (கலைப்பணி )
19. செல்வி வே.புஸ்பராணி (முன்பள்ளிகள் இணைப்பாளர்)
20. திரு.நாகலிங்கம் பாலகிருஸ்ணன் (சமூக சேவை)












## 2020.01.05 அன்று மதிப்பளித்து கௌரவிக்கப்பட்ட " காரைநகர் சேவையாளர்கள் "வருமாறு:

1. சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தகுருக்கள் - 1991 - 1996 வரையான ஈழத்து சிதம்பர சிவப்பணி
2. திரு.வே.செல்வநாயகம் - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி
3. திரு.ந.பாக்கியராஜா - ஈழத்து சிதம்பரம் திருப்பணி
4. திரு.க.சோமசேகரம் - வியாவில் ஐயனார் தேவஸ்தானம் ஊடான சமய சமூக பணி
5. சிவஸ்ரீ வி.ஈஸ்வரகுருக்கள் - சிவப்பணி , நீண்ட கால ஈழத்து சிதம்பர பிரதான குரு
6. திரு.க.தில்லையம்பலம் - கல்வி மற்றும் சமய சமூக பணி
7. திரு.சண்முகம் சிவஞானம் - சமய மற்றும் கலைப்பணி
8. திரு.சபாரத்தினம் மனோகரன் - களபூமி பிரதேச வளர்ச்சியின் ஈடுபாட்டாளர்
9. திருமதி சூரியா சிவரூபன் - காரை மாணவர்களிற்கான கல்விப்பணி
10. திரு.சங்கரப்பிள்ளை குகராஜா(குகன்) - சிரமதானம், சமுதாய அக்கறை, இளம் விவசாயி
11. அமரர் சு.முருகேசு - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி
12. அமரர் வே.சிவசுப்பிரமணியம்(10.40 மணியம்) ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி.
13. அமரர்.அ.சி.சிவலிங்கம் - மணிவாசகர் சபை மற்றும் ஐயனார் சிவன் இராஜகோபுர திருப்பணி
14. அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் - காரைநகர் அபிவிருத்தி சபை
15. அமரர் சபாபதி சபாரத்தினம் - பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்












## 2023.01.01 அன்று மதிப்பளித்து கௌரவிக்கப்பட்ட " காரைநகர் சேவையாளர்கள் "வருமாறு:

1. திரு. நா.செல்வரத்தினம் (ஆசிரியர்)
2. திரு. A.சோமாஸ்கந்தன்(ஆசிரியர்)
3. திரு. கா.குமாரவேலு (ஆசிரியர், அதிபர்)
4. திருமதி. அருமைநாயகம் கமலேஸ்வரி (ஆசிரியர்)
5. திருமதி.நாகரத்தினம் தனலட்சுமி (ராசாத்தி ரீச்சர் - ஆசிரியை, அதிபர்)
6. Dr.A.அம்பிகைபாகன்
7. திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை - (சிரமதான தொண்டன், பொதுப்பணியாளர்)
















## பத்து ஆண்டுகளை பூர்த்தி செய்யும் கனடா காரை கலாசார மன்றத்தின் பாடசாலைகளிற்கான கோடி ரூபா திட்டம் 2015.05.05 - 2025.05.05

கனடா காரை கலாசார மன்றம் காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் அனைத்திற்கும் 2015.05.05 அன்று தலா பத்து இலட்சம் ரூபா வீதம் பன்னிரண்டு பாடசாலைகளிற்கு மொத்தம் ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களை நிரந்தர வைப்பில் இட்டு வழங்கியது.



காரைநகர் பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய மேலதிக செலவுகளை வருடந்தோறும் நிவர்த்தி செய்யும் வகையில் அனைத்து பாசாலைகளிற்கும் தலா பத்து இலட்சம் ரூபாய்களை வங்கி நிரந்தர வைப்பில் இட்டு அதன் வட்டிப்பணம் வருடத்திற்கு இரண்டு தடவைகள் பாடசாலைகளின் நிர்வாக நடைமுறை வங்கிக்கணக்கிற்கு வங்கியினால் நேரடியாக வைப்பில் இடப்படும் வகையில் நிறைவேற்றியிருந்தது.

கடந்த பத்து ஆண்டுகளில் பாடசாலைகளிற்காக நிரந்தர வைப்பில் இடப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களிற்கு நிகராக இதுவரை வங்கி வட்டிப்பணமும் காரைநகர் பாடசாலைகள் பெற்றுள்ளன.

2015.05.05 தொடக்கம் இன்று வரை காரைநகர் பாடசாலைகள் அனைத்தும் அதற்குரிய வட்டிப்பணத்தினை பெற்று வருகின்றன. கனடா காரை கலாசார மன்றம் மேற்படி நிரந்தர வைப்புக்களை காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக வைப்பில் இட்டுள்ளதுடன் இப்பணமானது ஒருபோதும் அரச கல்வி திணைக்களத்திற்கு செல்லாத வகையில் நிரந்தர வைப்பில் இட்டுள்ளது.

இப்பணமானது நேரடியாக பாடசாலைகளின் பெயரில் பாடசாலை நிர்வாகத்தின் வங்கிக் கணக்கு ஊடாக வைப்பில் இடப்பட்டிருந்தால் அது அரசின் கல்வித்திணைக்களத்திற்கு உரிய பணமாகவும் வைப்பில் இடப்பட்ட மறுநாளே அது அரச உடமையாகவும் அந்த நிரந்தர வைப்பின் மீதோ அல்லது அதன் ஊடாக பெறப்படும் வட்டிப்பணத்தின் ஊடாகவோ பாடசாலைகள் செயற்படுத்த வேண்டிய செயற்திட்டங்கள் மீதோ எவராலும் தலையிட முடியாது என்பதும் வெளிப்படையான உண்மையாகும்.

இந்த நிரந்தர வைப்பு நிதியானது கனடா காரை கலாசார மன்றத்தின் திரு.தம்பிஐயா பரமானந்தராசா தலைமையிலும் திரு.தீசன் திரவியநாதன் செயலாளராகவும் திரு.திருநாவுக்கரசு பேரின்பராஜா பொருளாளராகவும் கடமையாற்றிய காலப்பகுதியான 2014 -2015ம் ஆண்டு காலப்பகுதியில் திட்டமிடப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்டது.

கனடா காரை கலாசார மன்றத்தின் இச்செயற்பாடானது அன்று முதல் என்றும் கனடா வாழ் காரை மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன் மற்றைய ஊர் மக்களிற்கும் மன்றங்களிற்கும் உதாரணமாகவும் அளப்பரிய மிகப்பெரும் திட்டமாக போற்றப்பட்டு வருவதும் யாவரும் அறிந்த ஒன்றாகும். அது மட்டுமன்றி இதுபோன்றதொரு கல்விச்செயற்பாட்டினையோ அல்லது வேறு எந்த செயற்பாட்டினையோ இனிவரும் காலங்களிலும் கனடா காரை கலாசார மன்றம் நிறைவேற்றும் என்பதிலும் கனடா காரை கலாசார மன்றத்தின் மீதுள்ள நம்பிக்கை முற்றாக சிதைக்கப்பட்டுள்ளது.

2014,2015ம் ஆண்டு காலப்பகுதியில் கனடா காரை கலாசார மன்றத்தின் அப்போதைய தலைவர் திரு.தம்பிஐயா பரமானந்தராசா மற்றும் செயலாளர் திரு.தீசன் திரவியநாதன் ஆகியோர் காரைநகரின் அனைத்து ஆரம்ப பாடசாலைகளிற்கும் நேரடியாக பல தடவைகள் விஜயம் செய்து ஒவ்வொரு பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை கண்டறிந்தனர். அவற்றை நிரந்தரமாக தீர்த்து வைக்க அப்போதைய காரைநகர் கல்விக்கோட்ட அதிகாரியாக கடமையாற்றிய திரு.பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களினதும் அப்போதைய காரைநகர் அபிவிருத்தி சபை தலைவராக கடமையாற்றிய அமரர் திரு.சிவா.தி.மகேசன் அவர்களது வழிநடாத்தலிலும் அப்போதைய காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி கிளை

முகாமையாளர் திரு.வி.கெங்காதரன் அவர்களது வங்கி செயற்பாடுகளினாலும் காரைநகர் பாடசாலைகளின் அதிபர்களின் நேரடி கண்காணிப்பிலும் வைப்பில் இடப்பட்டது. அத்துடன் பாடசாலை அதிபர்களினால் ஒத்துக்கொள்ளப்பட்ட ஏழு நியதிகளிற்கு அமைவாக காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் வங்கியில் வைப்பில் இடப்பட்டு வங்கி வட்டிப்பணம் நேரடியாக ஒவ்வொரு பாடசாலைகளின் அபிவிருத்தி சங்கத்தின் நடைமுறைக் கணக்கில் வரவில் இடப்படும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டது.



ஒவ்வொரு பாடசாலைகளும் கனடா காரை கலாசார மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏழு நியதிகளிற்கு உட்பட்டு மட்டும் கிடைக்கப்பெறும் வங்கி வட்டிப்பணத்தினை செலவு செய்யும் வகையிலும் காரைநகர் அபிவிருத்தி சபை அதனை வருடந்தோறும் உறுதி செய்வதுடன் அதன் செலவு விபரங்களை ஆரா ய்வு செய்து கனடா காரை கலாசாரமன்றத்திற்கு வருடந்தோறும் செலவு விபரங்களை அனுப்பி வைக்கவும் பணிக்கப்பட்டதுடன் அதனை ஏற்றுக்கொண்டு உறுதி செய்யப்பட்ட ஆவணமாக வழக்கறிஞர் திரு.சி.கனகசிங்கம் முன்னிலையில் அனைத்து பாடசாலை அதிபர்களும், காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகமும் கையொப்பம் இட்டு அதனை சட்ட வரைமுறை ஆவணமாக ஏற்றுக்கொண்டனர்.

பத்து ஆண்டுகளை நிறைவு செய்தும் மேற்படி பாடசாலைகளின் திட்டமானது இதுவரை வைப்பில் இடப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களிற்கு நிகராக வட்டியாக மேலும் ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களிற்கு மேற்பட்டளவில் பாடசாலைகளிற்கு பெற்றுக்கொடுத்துள்ளது. அத்துடன் வைப்பில் இடப்பட்ட ஒருகோடி இருபது இலட்சம் ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருந்து வருகின்றது.

இந்நிரந்தர வைப்பு நிதியானது காரைநகர் அபிவிருத்தி சபையின் வருடாந்த வரவு செலவு அறிக்கைகள் ஊடாக மேற்பார்வை செய்யப்பட்டு காரைநகர் அபிவிருத்தி சபையின் அங்கீகாரம் பெற்ற கணக்காய்வளரினால் உறுதிப்படுத்தப்பட்டு தெரியப்படுத்தப்பட்டு வருவதும் கடந்த பத்து ஆண்டுகளில் காரைநகர் அபிவிருத்தி சபையினரால் வெளியிடப்பட்ட கணக்கறிக்கைகள் ஊடாக அறிந்து கொள்ளப்படுவதும் யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்நிலையில் கனடா காரை கலாசார மன்றத்தின் அப்போதைய திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாகத்தினரால் காரைநகர் பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்ய வைப்பில் இடப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் மேற்படி நிதியானது பாடசாலைகளிற்கு நேரடியாக வழங்கப்படவில்லையெனவும் கனடா காரை கலாசார மன்றத்தின் நேரடி கண்காணிப்பிலும், நேரடி செயற்பாட்டிலும் இல்லையெனவும் மேற்படி நிதியானது தொலைந்து விட்டதாகவும் கனடாவில் ஒரு சிலரால் இன்றுவரை வதந்திகள் பரப்பப்பட்டு வருவதுடன் அதன் மூலம் தனிப்பட்டளவில் தமது காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்தி வருவதும் கனடா காரை கலாசார மன்றத்தின் அங்கத்தவர்கள் பலரும் அறிந்து கொண்ட விடயமாகும்.

கனடா காரை கலாசார மன்றமானது 1989ம் ஆண்டு ஈழத்து சிதம்பரம் திருத்தொண்டர் சபையாக ஆரம்பித்து 1992ம் ஆண்டு கனடா காரை கலாசார மன்றமாக பெயர்மாற்றம் பெற்றுக்கொண்டதும் அதன் பின்னர் 2015ம் ஆண்டு வரை கனடாவில் வதியும் காரைநகர் மக்கள் மத்தியில் ஒவ்வொரு ஆண்டுகளிலும் மன்றத்தின் ஊடாக காரை மண்ணின் பெயரால் பல்லாயிரக்கணக்கான கனடிய டொலர்கள் பல்வேறு தேவைகளிற்காக பெறப்பட்ட போதிலும் காரைநகர் மண்ணின் தேவையறிந்து மிகப்பெரும் அளவில் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் என வியந்து பார்க்கும் அளவிற்கு எதுவுமே இல்லாத நிலையில் 2015ம் ஆண்ட திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான திரு.தீசன் திரவிய - நாதன் செயலாளராக கடமையாற்றி வியத்தகு வகையில் காரைநகர் பாடசாலைகளின் நிரந்தர வைப்பாக ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் வைப்பில் இட்டுள்ளதும், அதே நிர்வாக காலப்பகுதியில் காரைநகர் பாடசாலைகளின் மற்றைய தேவைகளை நிவர்த்தி செய்யவும் மற்றைய பொது பணிகளிற்காகவும் மேலதிகமாக 80 இலட்சம் ரூபாய்கள் வரை காரை நகர் அபிவிருத்தி சபை ஊடாக நிறைவேற்றிய செயற்பாடுகளும் இன்றுவரை ஒரு தசாப்த காலமாக ஜீரணிக்க முடியாதளவு உண்மையாக வெளிப்பட்டு நிற்கின்றது.

அது மட்டுமன்றி கடந்த சில வருடங்களிற்கு முன்னர் காரைநகர் பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாட-













சாலையானது அரசினால் மாணவர் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டது. ஆனாலும் கனடா காரை கலாசார மன்றத்தினால் அப்பாடசாலைக்கு வைப்பில் இடப்பட்டிருந்த பத்து இலட்சம் ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் வைப்பில் இடப்பட்டிருந்த காரணத்தினால் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளதுடன் அதன் மூலம் மேலும் பெறப்படும் வட்டி பணமானது கடந்த சில ஆண்டுகளாக காரைநகர் அபிவிருத்தி சபையின் நடைமுறைக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டும் வரப்படுகின்றது.

2015ம் ஆண்டு ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் பாடசாலைக-ளிற்கான நிரந்தர வைப்பாக திடமான கொள்கையுடன் திரு.தம்பிஐயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாகம் வைப்பில் இட்டது காலங்களை கடந்தும் தீர்க்கதரிசனத்தை உணர்த்தியுள்ளதற்கான ஆதாமாக அமைந்துள்ளதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

2015ம் ஆண்டு காரைநகர் பாடசாலைகளிற்காக வைப்பில் இடப்பட்ட நிதியின் பெரும்பகுதியானது காரைநகர் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவென ஒரு சிலரால் மட்டும் பல்லாயிரக்கணக்கான கனடிய டொலர்கள் வழங்கப்பட்டிருந்ததும் அதில் அப்போதைய செயலாளராக கடமையாற்றிய திரு.தீசன் திரவியநாதன் - $20, 000 டொலர்களும்(25 இலட்சம் ரூபாய்கள் அப்போதைய பெறுமதியில் ), தலைவராக கடமையாற்றிய திரு.தம்பிஐயா பரமானந்தராசா $8,000 டொலர்களும்( 10 இலட்சம் ரூபாய்களும், Dr.கலைச்சந்திரன் - $5,000 டொலர்களும் ( 7 இலட்சம் ரூபாய்கள் ) வழங்கியிருந்தனர்.

அத்துடன் கனடாவில் கனடா காரை கலாசார மன்றத்துடன் மூவாயிர த்திற்கு மேற்பட்ட காரைநகர் மக்கள் கடந்த காலங்களில் தொடர்பில் இருந்துள்ளதுடன், 150 க்கும் மேற்பட்டவர்கள் கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாகத்தில் கடந்த காலங்களில் பணியாற்றியும் உள்ளனர். ஆனாலும் 85 கனடா வாழ் காரைநகர் மக்கள் மட்டுமே மேற்படி பாடசாலைகளிற்கான நிரந்தர வைப்பிற்காக தம்மாலான நிதி பங்களிப்பை வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து ஆண்டுகளை கடந்து காரைநகர் பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை இன்றும் இனியும் நிறைவேற் றிவரும் நிரந்தர வைப்பு நிதிக்கு நிதி பங்களிப்பு வழங்கிய நல்லுள்ளம் கொண்டவர்களை மீண்டும் ஒரு முறை அறிந்து கொள்ளும் வகையில் 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகை ஊடாக அவர்களது விபரம் எடுத்து வரப்படுகின்றது. அத்துடன் இந்த நிதியத்தை எவ்வாறு கையாள வேண்டும் என சட்ட ஆவமாக்கப்பட்டுள்ள அறிக்கையினை யும் உதாரணத்திற்கு ஒன்று எடுத்து வரப்பட்டுள்ளது.

காரைநகர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி காரைநகர் மக்களும் கனடா வாழ் காரைநகர் மக்களும் உள்ளம் தெளிவுற அறிந்து கொள்ளும் வகையில் விளக்கமாகவும் விபரமாகவும் எடுத்து வரப்பட்டுள்ளது. தகவல்கள் அனைத்தும் உண்மையின்பால் ஆதரவும் காரைநகர் மண்ணின் அபிவிருத்தியின் மேல் பற்றுக் கொண்டுள்ள பலரையும் சந்தேகத்திற்கு இடமின்றி விளங்கிக்கொள்ள ஏதுவான வகையிலும் அடுத்த பக்கங்களில் எடுத்து வரப்பட்டுள்ளன.

(அடுத்து வரும் 4 பக்கங்களில் 2015 இல் கனடா காரை கலாசார மன்றத்தால் வெளியிடப்பட்ட செயற்பாட்டு அறிக்கையில் இருந்து சில பக்கங்கள்... எடுத்து வரப்பட்டுள்ளன).

# கனடா-காரை கலாசார மன்றத்தின் காரைநகர் ஆரம்ப பாடசாலைகளிற்கான அடிப்படை அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிதியம் 2015

இத்தாள் சகலருமறிய கனடா காரை கலாசார மன்றத்தின் காரைநகர் ஆரம்ப பாடசாலைகளிற்கான அடிப்படை அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிதியம் 2015க்கான உறுதியாவது:

**ஆரம்ப நன்கொடையாளர்:**

கனடா-காரை கலாசார மன்றம் - கனடா

**உருவாக்குபவர்:**

ஆரம்ப நன்கொடையாளர் கனடா காரை கலாசார மன்றத்தின் வேண்டுகோளிற்கு இணங்க கனடா காரை கலாசார மன்றத்தினால் வழங்கப்பட்ட ரூபா 10,000,00 (பத்து இலட்சம்) மேற்படி நிதியத்திற்காக காரைநகர் அபிவிருத்தி சபையினால் காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி கிளையில் வைப்பில் இடப்படுகின்றது.

[illegible] இலக்கம் கொண்ட நிரந்தர வைப்பு நிதியத்தில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டியானது ஆறு மாத காலத்திற்கு ஒரு தடவை பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் (SDA) நடைமுறை கணக்கிற்கு வங்கியினால் நேரடியாக வைப்பில் இடப்படும். நிரந்தர வைப்பு நிதியில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டியில் இருந்து பாடசாலைகள் குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி இந்நிதியினை பயன்படுத்த வேண்டும்.

## இதன் குறிக்கோள்:

கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகர் அபிவிருத்தி சபையின் உதவியுடன் காரைநகர் ஆரம்ப பாடசாலைகளின் வருடாந்த அத்தியாவசிய, அடிப்படை தேவைகளை குறைந்தபட்சம் நிரந்தரமாக தீர்த்து வைப்பது.

## நியதிகள்:

ஆரம்ப நன்கொடையாளரான கனடா காரை கலாசார மன்றத்தினால் வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் நிரந்தர வைப்பில் இடப்படும். காரைநகர் அபிவிருத்தி சபையினரால் இந்நிரந்தர வைப்பு மீளபெற்றுக்கொள்ள முடியாது. ஆனாலும் கனடா காரை கலாசார மன்றத்தினால் ஆரம்ப பாடசாலைகளின் அத்தியாவசிய, அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட இந்நிதியத்திலிருந்து கிடைக்கப்பெறும் வட்டிப்பணம் இப்பாடசாலையினால் குறிப்பிட்ட நியதிகளிற்கு அமைவாக பயன்படுத்தப்படாத பட்சத்தில் கனடா காரை கலாசார மன்றத்தினால் மட்டுமே இந்நிரந்தர வைப்பு பணத்தினை மீள பெற்றுக்கொள்ள காரைநகர் அபிவிருத்தி சபைக்கு அறிவுறுத்தப்படும்.

கனடா காரை கலாசார மன்றத்தினால் அவ்வாறு மீள பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படும் பட்சத்தில் காரைநர் அபிவிருத்தி சபை முழு ஒத்துழைப்பு வழங்கி இந்நிரந்தர வைப்பு பணத்தினை மீளபெற்று கனடா காரை கலாசார மன்றத்திற்கு வழங்க வேண்டும்.

பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலையின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற ...2/0311/01/29235 இலக்கம் கொண்ட 10 இலட்சம் நிரந்தர வைப்பு நிதியத்தில் இருந்து கிடைக்கும் வட்டி பணம் பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்தி குழுவின்(SDA) வங்கி நடைமுறை கண்ணில் தேசிய சேமிப்பு வங்கியினால் வைப்பில் இடப்படும்.

மேற்படி இலக்கம் கொண்ட நிரந்தர வைப்பு நிதியம் தொடர்பாக வங்கியினாலே அல்லது காரைநகர் அபிவிருத்தி சபையினாலே மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமாயின் அதனை பாடசாலை அதிபருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டிய பொறுப்பு காரைநகர் அபிவிருத்தி சபையினை சாரும்.

காரைநகர் அபிவிருத்தி சபையின் வருடாந்த மற்றும் நிர்வாக சபையின் இறுதி கணக்கறிக்கைகளில் 12 ஆரம்ப பாடசாலைகளிற்குமான நிரந்தர வைப்பு நிதியம் காட்டப்படுவதோடு, ஒவ்வொரு நிதியத்தின் கணக்கிலக்கமும் எந்தெந்த பாடசாலைகளிற்குரியது என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

<u>பாடசாலை அபிவிருத்தி குழுவின் நடைமுறை வங்கி கணக்கிற்கு வைப்பிலிடப்படும் இந்நிதியத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி பணமானது பின்வரும் நியதிகள் மூலம் பாடசாலை அபிவிருத்தி குழுவினால் செயற்படுத்தப்படும்</u>

1. நேரடியாக கற்றல், கற்பித்தில் செயற்பாடுகளுக்கு 50 % (மேலதிக வகுப்புகளிற்கான ஆசிரியர் நிவேதனம், மெல்ல கற்கும் மாணவர்களிற்கான விசேட வகுப்புகளிற்கான ஆசிரியர் நிவேதனம் மற்றும் அதற்குரிய செலவீனங்கள்).

2. இணைப்பாடவிதான செயற்பாடுகள் (Co Curricular Activities) 20% (விளையாட்டு, தமிழ் திறன் போட்டி, பரிசளிப்பு நிகழ்வுகள்).

3. மேலதிக மின்கட்டணம் மற்றும் சிறு திருத்த வேலைகள் 20%

4. சுகாதாரம், உணவு, குடிநீர் கட்டணம் 10%

5. காரைநகர் கோட்ட கல்வி அதிகாரி தலைமையில் நடைபெறும் வருடாந்த அதிபர்களின் கூட்டத்தில் வருடத்திற்க ஒரு தடவை பாடசாலைகளின் தேவைகளிற்கு அமைவாக மேற்படி நியதிகள் மாற்றியமைக்கப்பட்டு கனடா காரை கலாசார மன்றத்தின் அனுமதியினை பெற்ற பின்னர் நடைமுறைப்படுத்தலாம்.

6. இந்நிதி தொடர்பாக கனடா-காரை கலாசார மன்றத்திற்கு அறிவிக்கும் பொறுப்பு அதிபர் பிரத்தியேகமான ஒரு கட்டுப்பாட்டு பேரேட்டினை பேணி தவணைக்கு ஒரு தடவை வரவு செலவு அறிக்கையினை கனடா காரை கலாசார மன்றத்திற்கும், காரைநகர் அபிவிருத்தி சபைக்கும் அனுப்புதல் வேண்டும்.

**7. இந்நிதியத்தின் நிரந்தர வைப்பு அல்லது வைப்புக்கான வட்டி மேற்குறிப்பிட்ட தேவைகள் தவிர்ந்த வேறு எந்த தேவைகளுக்கும் பயன்படுத்த முடியாது.**

## ஆட்சி உறுப்பினர்கள்:

இந்த நிதியத்தின் ஆட்சி உறுப்பினர்களாக காரைநகர் அபிவிருத்தி சபை, பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்தி குழுவும், இவர்களுடன் இணைந்து ஆரம்பகால நன்கொடையாளர் கனடா காரை கலாசார மன்றத்தினாலும் இந்நிதியம் முகாமைத்துவப்படுத்தப்படும்.

## ஆவணங்கள்:

வங்கியில் வைப்பில் இடப்படும் 10 இலட்சம் ரூபா நிரந்தர வைப்பு நிதியத்தின் வைப்பு சான்றிதள் காரைநகர் அபிவிருத்தி சபை காரியாலயத்தில் காரைநகர் அபிவிருத்தி சபையினரால் பாதுகாப்பில் பேணப்படும்.

ஆரம்ப நன்கொடையாளர் கனடா காரை கலாசார மன்றத்தின் நியதிகளிற்கு அமைய இந்நிதியத்தினை வங்கியில் நிரந்தர வைப்பிலிட்டு உருவாக்குபவர்களான காரைநகர் அபிவிருத்தி சபையினர் மற்றும் பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர், ஆகியோருக்கு இலங்கை குடியரசின் பிரசித்த நொத்தாரிஸ் ........................................................ ஆகிய நான் மேற்படி சாதனத்தை அதன் அதன் நம்பிக்கை நிதிய உறுப்பினர்கள் சாட்சிகள் முன்னிலையில் வாசித்து விளங்கப்படுத்தினேன் என்றும் இவர்களை நான் அறிவேன் என்றும் குறித்த உறுப்பினர்களும் சாட்சிகளும் நொத்தரிஸ் ஆகிய நானும் என் முன்பாகவும் அவர்கள் ஒருவருக்கொருவர் முன்பாகவும் இருந்து 2015ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் திகதியாகிய இன்று ஒரே சமயத்திற் கையொப்பங்களை வைத்தோமென்றும் உறுதிப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

............................................................
காரைநகர் அபிவிருத்தி சபை சார்பாக

............................................................
பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர்

PRINC'PAL
J/Palavodai H.T.M.School
KARAINAGAR.

சாட்சிகள்:

1) ............................................................
2) ............................................................

..............................
திகதி

..............................
பிரசித்த நொத்தாரிஸ்

S.Kanagasingham LL.B (Sri Lanka)
Attorney-at-Law & Notary Public
Anaipanthywalawu
Tholpuram-Chulipuram

## மேலதிக தகவலுக்காக:

05.05.2015 அன்று மேற்படி நிதியம் வைப்பில் இடப்படும் பொழுது கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாக சபையின் தலைவராக திரு.தம்பிஐயா பரமானந்தராசா, செயலாளராக திரு.பிரமேந்திரதீசன்(தீசன்) திரவியநாதன், பொருளாளராக திரு.பேரின்பராஜா திருநாவுக்கரசு, உபதலைவராக திரு.பொன்னம்பலம் தவக்குமார், உபசெயலாளராக திரு.ஜெயசந்திரன் தம்பிராஜா, உபபொருளாளராக திரு.ஜெயகுமார் நடராசா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக திரு.தம்பையா அம்பிகைபாகன், திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன், திருமதி ஞானாம்பிகை குணரத்தினம், திரு.கேதீஸ்வரன் பரமு, திரு.கனகசபை குமரேசன், திரு.உருத்திரலிங்கம் தம்பையா ஆகியோர் நிர்வாக சபையில் பதவி வகிக்கின்றார்கள்.

**கனடா காரை கலாசார மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்நிதியத்திற்கு 05.05.2015 வரை நிதியுதவி வழங்கியோர் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.**

2015.05.05 அன்று கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகரில் உள்ள 12 ஆரம்பர பாடசாலைகளிற்கு ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் வழுங்க நிதி உதவி வழங்கிய அன்பர்களது பெயர் விபரம் மீண்டும் ஒரு முறை தங்களது தகவல்களிற்காக...

| | | |
|---|---|---|
| Theesan | Thiraviyanathan | 20,000.00 |
| Paramanantharajah | Thambyayah | 8,000.00 |
| Dr Kalaichandran | | 5,000.00 |
| Gopal | Mailwaganam | 1,200.00 |
| Vigneswaran | Tharmalingam (USA) | 1,200.00 |
| Yogeswary | Suntharesu | 1,200.00 |
| Maheshan | Velauthapillai | 1,000.00 |
| Prabaharan | Piremalakumary (Australia) | 1,000.00 |
| Ravichandran | Thambirajah | 1,000.00 |
| Krisnagopal | Tharmalingam | 1,000.00 |
| Dayligh maintennance service inc | | 500.00 |
| Dr Jayabalan | Namasivagam | 500.00 |
| Gunaratnam | Somasundaram | 500.00 |
| Logeswaran | Vijayaratnam | 500.00 |
| Maheswaran | Balasuperamaniam | 500.00 |
| Sachichinathan | Sittampalam | 500.00 |
| Sivaguru | Kandiah | 500.00 |
| Thavakumar | Ponnambalam | 500.00 |
| Thevakumar | Sellathurai | 500.00 |
| Thurairathinam | Somasundaram | 500.00 |
| Unicar heating & air Conditioning Ltd | | 500.00 |
| Pirakalatheeswaran | Nadarajah | 500.00 |
| Well Wisher | K.S | 500.00 |
| Lingarajan | Nagalingam | 450.00 |
| Prakash | Balasundram | 400.00 |
| Jeyakumar | Sivakumaran | 300.00 |
| Ariyaratnam | Manokaran | 250.00 |
| Babyrani | Thambyayah | 250.00 |
| Balasubramaniam | Kanagasabai | 250.00 |
| Devarajan | Chelliah | 250.00 |
| Jeevanantharajah | Thambiyah | 250.00 |
| Jeyachandran | Thambirajah | 250.00 |
| Jeyakumar | Nadarajah | 250.00 |
| Kajamugan | Nagaratnam | 250.00 |
| Kanagasabathy | Mannikkam | 250.00 |
| Kanagasundaram | Sivakumaran | 250.00 |
| Kandasamy | Shanmugam | 250.00 |
| Krishnaratnam | Somasundaram | 250.00 |
| Kuganeshapavan | Sivasubramaniam | 250.00 |
| Maharajah | Sangarapillai | 250.00 |
| Mahendram | Visvalingam | 250.00 |
| Mannivannan | Senthilnathan | 250.00 |
| Manokarathas | Kandiah | 250.00 |
| Paramswaran | Vijayaratnam | 250.00 |
| Kandeepan | Parameswaran | 250.00 |
| Paranthaman | Visvalingam | 250.00 |
| Sajee | Navaratnam | 250.00 |
| Satkunarajah | Thuirunavukkarasu | 250.00 |
| Sivaramalingham | Sivasubramaniam | 250.00 |
| Sivarasan | Sathasivam | 250.00 |
| Sothynanthan | Arumugam | 250.00 |
| Sri ranganathan | Arumugam | 250.00 |
| Suthaharan | Gunasegaram | 250.00 |
| Thayaparan | Manikkavasagar | 250.00 |
| Thirunavukkarasu | Perinparajah | 250.00 |
| Umaiyabahan | Kanagendram | 250.00 |
| Vignarajah | Balasubramaniam | 250.00 |
| Vinayagarajah | Balasubramaniam | 250.00 |
| Pathmanathan | Maheswaran | 250.00 |
| Sivananthan | Mahanathan | 250.00 |
| Sivamalar | Mahadevan | 250.00 |
| Maheswaran | Vijayaratnam | 250.00 |
| Sivathevi | Sivasothy | 250.00 |
| Gugadas | Kandasamy | 250.00 |
| Rajagopal | Shanmugam | 250.00 |
| Vijayakumar | Nadarajah | 250.00 |
| Indrathevi | Jeganathan | 250.00 |
| Vicknarajah | Kandiah | 250.00 |
| Mayuran | Velauthapillai | 250.00 |
| Arikaran SPS | S | 250.00 |
| Kirupakaran | Nagarajah | 200.00 |
| Krishnamoorthy | Nelakandan | 200.00 |
| Kunchithapatham | Nagalingam | 200.00 |
| Kumareshan | Kanagasabai | 200.00 |
| Chandrasooriyakumar | M.A.Kandiah | 200.00 |
| Sivanayakam | Sivasankar | 200.00 |
| Balakumar | Vellauthampillai | 150.00 |
| Kalatharan | Manikkavasagar | 150.00 |
| Thanapalashingham | Ramanathan | 150.00 |
| Sivapakkium | Maheswaran | 150.00 |
| Ganeshamoorthy | Subramaniam | 150.00 |
| Chelvanayakam | Subramaniam | 100.00 |
| Gunaratnam | Somasundram | 120.00 |
| Ketheeswaran | Paramu | 100.00 |
| Kodeswaran | Arumugam | 100.00 |
| Manohararajah | Subramaniam | 100.00 |
| Well Wisher | AS | 100.00 |
| Senthilnathan | Markkandu | 100.00 |
| Sachichinathan | Sundareswary | 100.00 |
| Shanmugaratnam | Thillaiyampalam | 100.00 |
| Shanmugam | Vellupillai | 100.00 |
| Sivapalan | Sivasothy | 100.00 |
| Thayanantharajah | Ramanathan | 100.00 |
| Thirukumar | Kasipillai | 100.00 |
| **Piraisudi** | **Thurairajah** | **100.00** |
| **Raveendran** | **Arasaratnam** | **100.00** |
| **Rajendram** | **Velupillai** | **100.00** |

**இவர்களுடன் இலங்கை ரூபாயில்..**

| | |
|---|---|
| திருமதி மனோன்மணி தம்பிராசா(மாஸ்ரர்) | 1,00,000.Rs |
| திரு.S.அப்பாப்பிள்ளை(மாஸ்ரர்) | 25,000 Rs |
| பொன்னம்பலம் மாஸ்ரர் | 51,000 Rs |

கனடா காரை கலாசார மன்றம்
காரைநகரிற்கான நிரந்தர
கல்விப்பணிக்கான நிரந்தர
வைப்பு 12 மில்லியன் ரூபாய்கள்
2015.05.05

## காரை இந்து விளையாட்டு மைதான சுற்று மதில் அமைப்பு நிறைவு பெற்றது

காரைநகர் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதான த்தின் கிழக்கு மற்றும் தெற்குப்புற மதில்கள் சிதைவ டைந்து பகுதி பகுதிகளாக விழுந்து வந்த காரணத் தினால் சுற்றுப்புற மதில் அமைக்கப்பட வேண்டிய கட்டாய சூழ்நிலை நிலவி வந்தது. இத்தேவையினை அறிந்து கொண்டு பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கம் கிழக்கு பகுதி மதில் சுவரை கட்டுவதற்கு முன்வந்திருந்தது.






அதனையடுத்து 13.06.2023 அன்று கிழக்கு பகுதி மதில் கட்டுவதற்கான அத்திவாரம் இடப்பட்டு கிழக்கு மற்றும் தெற்குபுறத்தில் பார்வையாளர் மண்டபம் வரை கட்டுவதற்கு உரிய நிதி உதவியினை மட்டும் வழங்கியிருந்தது.




மேற்கொண்டு தெற்கு மற்றும் மேற்கு பகுதி மதிலை அமைப்பதற்குரிய பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் காரைநகர் சம்பந்தர்கண்டியை சேர்ந்த அமரர்கள் சோமசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வரும், கனடா காரை கலாசார மன்றத்தின் போஷகரில் ஒரு-வரும் கனடாவில் வசித்து வருபவருபவருமான திரு.சோமசுந்தரம் கணேசபிள்ளை அவர்கள் ஊரிற்கான பயணத்தினை மேற்கொண்டிருந்தார். தனது பயணத்தின் போது, தான் கல்வி கற்ற பாடசா லையான காரை இந்துவிற்கு விஜயம் மேற்கொண்டி ருந்தார், அதன் போது பாடசாலை விளையாட்டு மைதானத்தின் மதில் சுவர் கட்டப்பட்டு இடைநிறுத்த ப்பட் டிருப்பதனை அறிந்து மிகுதி பணியினை தனது குடும்பத்தின் சார்பாகவும் தனது தாய் தந்தையரின் நினைவாகவும் அமைத்துக் கொடுக்க முன்வந்திருந் தார். தெற்குபுறத்தின் ஒரு பகுதியும் மேற்குப்புறம் முழுவதுமாக இருந்த 350 நீளமான மதில் சுவரினை அமரர்கள் சோமசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி அவர்களின் ஞாபகர்த்தமாக திரு.சோமசுந்தரம் கணேசபிள்ளை மற்றும் இலண்டன் பிரித்தானியாவில் வதியும் சகோதரியான சோமசுந்தரம் சரோஜினிதேவி ஆகியோரது நிதி பங்களிப்புடனும் நிறை வேற்ற ப்பட்டது.




மேற்படி சுற்றுப்புற மதில் அமைக்கும் பணியில் நேரடியாக செயற்பட்டு அல்லும் பகலும் ஒரு வருட காலத்திற்கு மேற்பட்டளவில் அனைத்து பணிகளிலும் முன்னின்று செயற்படுத்தியவர் முன்னாள் பாடசாலையின் விளையாட்டுத் துறை ஆசிரியராகவும் காரைநகர் சேவையாளருமான திரு.எஸ்.கே. சதாசிவம் ஆசிரியர் அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.












## சயம்பு சிலை மீளவும் புனரமைப்பு

காரைநகர் இந்துக் கல்லூரி வடக்கு வளாகத்தின் முகப்பு தோற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்லூ ரியின் ஸ்தாபகர் முத்து சயம்பு அவர்களின் திருவுருவச்சிலை மீண்டும் புனரமைக்கப்பட்டு மீளவும் 04.07.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இடப்பெயர்வின் பின்னர் கடந்த காலங்களில் கனடிய தொழிலதிபர் திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்களது நிதி அனுசரணையுடன் கடந்த காலங்களில் இச்சிலையானது புனரமைக்கப்பட்டி ருந்தது, ஆனாலும் சிலையின் முகப்பு தோற்றம் திருப்தி அளிப்பதாகவில்லை என்ற விமர்சனம்

பலராலும் முன்வைக்கப்பட்டதையடுத்து இந்தியா தமிழகத்தை சேர்ந்த சிற்பாச்சாரி ஒருவர் மூலம் இச்சிலை மீளவும் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இதற்கு தேவையான ரூபா ஐந்து இலட்சம் நிதியுதவியினை திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்கள் வழங்கி நிறைவேற்றியு -ள்ளார்.





## ஆசிரியர் திரு.நவரட்ணம் சத்தியமூர்த்தி இயற்கை எய்தினார்



காரை இந்துவில் பதினெட்டு ஆண்டுகளாக (1974-1993) பௌதிகவியல் ஆசிரியராக பணியாற்றிய திரு.நவரட்ணம் சத்தியமூர்த்தி அவர்கள் 20.04.2024 அன்று இயற்கை யெய்தினார். காரைநகரிற்கு வெளியே அராலி கிராமத்தில் வசித்து வந்த போதிலும் காரை இந்துவிற்கு 18 ஆண்டுகளாக விரும்பி வந்து பணி செய்த அமரர் சத்தியமூர்த்தி மாஸ்ரர் அவர்கள் காரைநகர் மாணவர் களால் அக்காலத்தில் பெரிதும் விரும்பப்பட்ட ஆசிரியரா -வார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய காரைநகர் மக்கள் மற்றும் பழைய கல்வி கற்ற பழைய மாணவர்கள் சார்பாக பிரார்த்திப்போமாக.

## ஆசிரியை திருமதி அருமைநாயகம் சிவபாக்கியம் சிவபதம் அடைந்தார்

காரைநகர் இந்துக்கல்லூரியின் மூன்று தசாப்தகால முன்னாள் ஆசிரியையும், "எனது ஊர் காரை நகர்" வழங்கிய "காரைநகர் சேவையாளர்" கௌரவம் பெற்றவருமான திருமதி அருமைநாயகம் சிவபாக்கியம்(அருமைநாயகம் ரீச்சர்) அவர்கள் 25.07.2024 அன்று சிவபதம் அடைந்தார்.



அன்னார் காரைநகர் இந்துக்கல்லூரியில் 1970 களில் இறுதியில் வர்த்தகம், தமிழ், சமயம் பாடங்களை கற்பிக்க தொடங்கி 1980 களிலும் 1990 களின் இறுதி வரை தொடர்ந்து 23 ஆண்டுகளாக மூளாயில் இருந்து வருகை தந்து காரைநகரில் ஆசிரியப்பணியாற்றிய பெருந்தகை.

2023.01.01 அன்று "எனது ஊர் காரைநகர்" karainews.com ஊடாக வழங்கப்பட்ட "காரைநகர் சேவையாளர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

காரை மண்ணை விரும்பி மூளாய் கிராமத்தில் இருந்து வந்து இரண்டு தசாப்தங்களிற்கு மேலாக காரை இந்துவில் கல்வி புகட்டிய எங்கள் ஆசான் அருமைநாயகம் ரீச்சர் அவர்கள் திண்ணபுர சிவன் காலடியில் நிம்மதி பெருவாழ்வு பெற எல்லாம்வல்ல எங்களூர் ஈசனை பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி.

## காரைநகர் இந்துக் கல்லூரியில் இருந்து 2023 -2024 (O/L) சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள்:



R.Navaneethan 9A



R.Navaneethan 8A, C



K.Kopalakirush -nan 8A, S



P.Kapilan 7A, B, C



M.Jaseepan 7A, B, C



T.Mathusan 7A, B, S



K.Abarnan 6A, 2B, S



Y.Kapishanth 6A, B, 2C



S.Thasankan 6A, B, 2S

# நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 'எனது ஊர் காரைநகர்' ஊடாக 12 இலட்சம் ரூபாய்கள் உதவி வழங்கப்பட்டது




காரைநகர் நீலங்காடு கடற்றொழிலாளர்கள் போரின் பின்னர் மீளகுடியேறிய போதிலும் மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ள நிலையிலும் தமது பாரம்பரிய மீன்பிடித்தொழிலை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலையில் பின்தங்கியுள்ளனர்.
பாரம்பரிய மீன்பிடி முறையான கட்டுமரங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மீன்பிடித்தொழிலை கைவிட்டு சிலர் ஊரை விட்டு வெளியேறி வருவதுடன் மேலும் நிரந்தர மற்ற கூலித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டுமரங்களை பெற்றுக்கொள்ள கடனடிப்படையில் சுழற்சி முறையில் வழங்குவதற்கு ஏதுவாக 20 இலட்சங்களை பெற்றுத்தருமாறு நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கம் காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக கடந்த ஆண்டு கனடா காரை கலாசார மன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினராக பணியாற்றி வந்த தீசன் திரவியநாதன் இதற்குரிய நிதியை கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக பெற்றுக்கொடுக்கும் வகையில் கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாகத்தினருடன் 2023ம் ஆண்டு நடைபெற்ற 'காரை வசந்தம்' நிகழ்வுகளின் போது ஆதரவு வழங்கியதும், அதன் மூலம் 10 இலட்சம் ரூபாய்களை வழங்குவதற்கு கனடா காரை கலாசார மன்றத்தின் திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையிலான நிர்வாகம் முன்வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் 'காரை வசந்தம் 2023' நிகழ்வுகள் முடிவில் நிர்வாகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் வரவு செலவுகளை சமர்ப்பிக்க தவறிய திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையிலான நிர்வாகம் நிர்வாகத்தை கைவிட்டு செல்ல வேண்டிய நிலமைக்கு தள்ளப்பட்டார்கள். இருந்த போதிலும் 28.04.2024 அன்று நிர்வாகத்தை கைவிட்டு சென்ற நிலையில் மன்றத்திடம் கணக்கு வழக்குகள் எதுவுமற்ற நிலையில் 26.04.2024 அன்று நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 5 இலட்சம் ரூபாய்களை வழங்கும் வகையில் காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகத்திற்கு நிதியினை அனுப்பி வைத்திருந்தது. ஆனாலும் இன்றுவரை 16.10.2024 வரை அந்த நிதியினை நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு வழங்க முடியாத நிலையில் காரைநகர் அபிவிருத்தி சபையின் திரு.ஹம்சன் விஸ்வலிங்கம் தலைமையிலான நிர்வாக காலம் கடத்தி வருகின்றது அறிந்து கொள்ளப்படவேண்டியது.

2024 ஜனவரியில் ஊர் திரும்பியிருந்த தீசன் திரவிய - நாதன் அவர்களை வரவழைத்திருந்த நீலங்காடு கடற்றொழிலாளர் சங்க நிர்வாகத்தினர், கனடா காரை கலாசாரமன்றம் 10 இலட்சம் ரூபாய்களை வழங்க முன்வந்திருந்ததையிட்டு அதனை நம்பி முதற்கட்டமாக 5 கட்டுமரங்களை பெற்றுக்கொள்ள முற்பணம் வழங்கப்பட்டிருப்பதாகவும் ஐந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தம்மாலான நிதியினை வழங்கி முற்பணம் செலுத்தியிருப்பதாகவும் ஓடர் செய்யப்பட்ட ஐந்து கட்டுமரங்களை பெற்றுக்கொள்ள உடனடியாக 2 இலட்சம் ரூபாய்கள் தேவை என்பதையும் மேற்கொண்டு 10 கட்டுமரங்களை பெற்றுக்கொள்ள கனடா காரை கலாசார மன்றம் தருவதாக வாக்குறுதியளித்திருந்த 10 இலட்சம் ரூபாய்களை பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

இந்த நிலையில் 'எனது ஊர் காரைநகர்' முகநூல் வாயிலாக எடுத்து வரப்பட்ட செய்தியறிந்து முதற்கட்டமாக 2 இலட்சம் ரூபாய்கள் 26.02.2024 அன்று வழங்கப்பட்டது. அதனை வழங்கிய முகநூல் நண்பர்கள் விபரம் வருமாறு:

1. க. உமைபாகன்(கனடா) - 50,000 ரூபா
2. தி.தவச்செல்வன்(அமெரிக்கா) - 50,000 ரூபா
3. குயின்ரினா அருமைத்துரை(கனடா) - 12,000 ரூபா
4. சிவரூபன் கோமதி(வவுனியா) - 25,000 ரூபா
5. பா.சோமசுந்தரம் (கிளிநொச்சி) - 10,000 ரூபா
6. தீசன் திரவியநாதன் - 53,000 ரூபா

மொத்தம்: 200,000 ரூபா.



மேலும் நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தின் சுழற்சி முறை கடன் அடிப்படையில் நிதியுதவி வழங்கி பயனாளிகளிற்கு கடனாக வழங்கப்படும் நிதி மூலம் கட்டுமரங்களை பெற்றுக்கொண்டு பாரம்பரிய மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 'எனது ஊர் காரைநகர்' ஊடாக எடுத்துவரப்பட்ட செய்தி விபரங்களை அறிந்தும் 1973 பொன்னகவை மாணவர்களினால் காரை இந்துவிற்கு கட்டி வழங்கப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் திறப்பு விழா நிகழ்விற்கு வருகை தந்திருந்த பொன்னகவை மாணவர்களில் ஒருவரான திரு.கனகேந்திரம் உமைபாகன் அவர்கள் நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகளை அறிந்து கொண்டும் தனது சொந்த நிதியில் 10 இலட்சம் ரூபாய்களை வழங்க முன்வந்திருந்தார்.




திரு.கனகேந்திரம் உமைபாகன் (10 இலட்சம்)

அதனையடுத்து காரைநகர் பிரதேச செயலர் செல்வி B.நிரஞ்சனா மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி சமா ஜமும் நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தின் மாதாந்த கணக்கறிக்கைகளை பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளவும் வழங்கப்படும் நிதியானது கடனடிப்படையிலும் மீண்டும் மாதாந்த அடிப்படையில் பயனாளிக-ளிடம் இருந்து பெறப்படும் நிதி ஊடாக சுழற்சி முறையில் மேலதிக பயனாளிகள் பயன்பெறுவதையும் காரைநகர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் உறுதிப்படு -த்திக்கொள்ளும் வகையிலும் கனடாவில் இருந்து திரு.கனகேந்திரம் உமைபாகன் வழங்கிய 10 இலட்சம் ரூபா நிதி 15.05.2024 அன்று நீலங்காடு கடற்றொழிலாளர் சங்க தலைவர் திரு.பொ.கணேசு அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிதியானது காரைநகர் பலநோக்கு கூட்டுறவுக் கிராமிய வங்கியில் இடப்பட்டு காரைநகர் பிரதேச செயலர் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்ட போது அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் திரு.சுப்பிரமணிய ம் குருபரன் ஆகியோர் உடனிருந்தனர். அதனை பெற்றுக்கொண்ட நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தினர் நன்றியறிதல் கடிதத்தினை 'எனது ஊர் காரைநகர்' தொகுப்பாளரிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.






காரைநகர் நீலங்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
Karainagar Neelangadu Fishermens Co-operative Society

மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் பெறுவதற்கான பண உதவி கோரல்.



காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கூட்டுறவுக் கிராமிய வங்கி



காரைநகர் நீலங்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
Karainagar Neelangadu Fishermens Co-operative Society



## காரைநகர் முன்பள்ளிகளின் நீண்டகால நிரந்தர வளர்ச்சிக்கு கைகொடுப்போம்



காரைநகர் புதுறோட் அம்பாள் முன்பள்ளியின் வளர்ச்சியும் கல்வி செயற்பாடுகளும் கடந்த ஐந்து ஆண்டுகளில் வியத்தகு வளர்ச்சி கண்டுள்ளது கவனிக்கத்தக்கது. ஆனாலும் முன்பள்ளிக்கான நிரந்தர வகுப்பறைகளோ அல்லது பௌதீக வளங்களோ அற்ற நிலையிலும் வருடந்தோறும் 35 முதல் 40 வரையான பாலர்கள் தமது முதல் கல்வியை ஆர்வத்துடன் பயில்வதற்கு புதுறோட் சந்திக்கு அண்மையிலுள்ள தனியார் வீடு ஒன்றில் நடாத்தப்பட்டு வந்தது.



இந்த நிலையில் கடந்த சில வருடங்களிற்கு முன்னர் புதுறோட் கிழவன்காடு கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்திற்கு முன்னால் உள்ள அமரர் ஜெ. தில்லையம்பலவாணர் அவர்களுடைய காணியின் ஒரு பகுதியை சலுகை விலை அடிப்படையில் அம்பாள் முன்பள்ளிக்கு விற்பதற்கு திருமதி.ஜெ.தில்லையம்பலவாணர் அவர்கள் முன்வந்ததையொட்டி "எனது ஊர் காரைநகர்" தீசன் திரவியநாதன் மற்றும் ஒரு சில அன்பர்களது நிதி உதவியுடன் அம்பாள் முன்பள்ளி நிர்வாகத்தினருடன் இணைந்து இக்காணி முன்பள்ளிக்காக வேண்டப்பட்டது.



முன்பள்ளிக்கான கட்டிடப்பணிகளை ஆரம்பிக்க தனியார் ஒருவரது முயற்சியால் அத்திவாரமும் இடப்பட்டது. ஆனாலும் கோவிட் பெருந்தொற்று காரணமாக தடைப்பட்ட கட்டிடப்பணிகள் மேற்கொண்டு முன்னெடுத்து செல்ல முடியாதளவிற்கு தடைப்பட்டது.

அதன்காரணமாக இவ்வாண்டு ஆரம்பம் முதல் குறைந்த செலவில் புதிய கட்டிட மாதிரிக்கான வரைபு பெறப்பட்டு "பிள்ளையார் சனசமூக நிலைய" நிர்வாகத்தின் கீழ் நடைபெற்றுவரும் அம்பாள் முன்பள்ளி செயற்பாடுகளின் பிரகாரம் வேண்டப்பட்ட புதிய காணியில் முன்பள்ளி கட்டிடத்திற்கான அத்திவாரம் 12.07.2024 அன்று இடப்பட்டது.



அதனைத்தொடர்ந்து கல்விக்காக காரை சிறார்களின் எதிர்கால திட்டங்களை கருத்தில் கொண்டு காரை மக்களிடம் நிதி சேகரிக்கும் பணியில் பிள்ளையார் சனசமூக நிலைய நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர்.



அண்ணளவாக ஒன்றரை கோடி ரூபா செலவில் அமையவுள்ள முன்பள்ளி கட்டிடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டதை தொடர்ந்து வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் வாழ்ந்துவரும் கல்வியாளர்கள் தமது பங்களிப்பினை செலுத்தி வருகின்றனர். முதல் கட்டமாக கல்விக்காக நிதி வளங்க முன்வரும் பரோபகாரிகள் ஒரு இலட்சத்திற்கு மேல் வழுங்க முன்வருபவர்கள் ஒருவருட காலத்தினுள் பகுதி பகுதியாக கட்டிட பணிகளின் போது "பிள்ளையார் சனசமூக நிலைய" நிர்வாகத்தினரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவும் வசதியாக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில் இதுவரை 50 இலட்சம் ரூபாய்களிற்கு மேற்பட்டளவில் பரோபகாரிகள் அம்பாள் முன்பள்ளி

கட்டிட நிதிக்காக உதவ முன்வந்து தமது நன்கொடையை பதிவு செய்துள்ளனர். "எனது ஊர் காரைநகர்" தீசன் திரவியநாதன் - 5 இலட்சம் வளங்க முன்வந்துள்ளதோடு முதல் கட்ட நிதியாக இரண்டரை இலட்சம் ரூபாய்களை 05.08.2024 அன்று வளங்கிவைக்கப்பட்டது.



அம்பாள் முன்பள்ளியின் நிர்வாகம் "பிள்ளையார் சனசமூக நிலையத்தின் ஊடாக நிர்வகிக்கப்பட்டு வருவதுடன் பிள்ளையார் சனசமூக நிலையத்தினரால் கட்டிடப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



பிள்ளையார் சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு:
**தலைவர்:** திரு. நாகலிங்கம் பாலகிருஸ்ணன்
**உபதலைவர்:** திரு. கணபதிப்பிள்ளை நிமலதாசன்
**செயலாளர்:** திரு.விஷ்வலிங்கம் வைகுந்தவாசன்
**உபசெயலாளர்:** திரு.பா.சிவறஞ்சன்
**பொருளாளர்:** திரு.இராசையா சண்முகராசா
**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**
திரு. உ.கோகுலன்
திரு. வி.ஹம்சன்
திரு. செ.அகிலன்
திரு. வே.செல்வராசா
திரு. வி.ஹரிகரன்
திரு. பொ.கருணாநிதி
திரு. சு.அகிலன்
திரு. சு.புண்ணியமணியம்
திரு. தி.சயந்தன்



முன்பள்ளிகளின் நிரந்தர வளர்ச்சிக்கு கைகொடுக்கும் வகையில் வெளிநாடுகள் வாழ் காரை மக்கள் நேரடியாகவோ அன்றி "எனது ஊர் காரைநகர்" காரை நியூஸ் தொகுப்பாளர் தீசன் திரவியநாதன் ஆகிய என்னை தொடர்புகொள்வதன் ஊடாக உங்கள் நன்கொடை நிர்வாகத்தினரிடம் முறையாக செல்வதையும் தங்களுக்குரிய பற்றுச்சீட்டினை பெற்று தருவதிலும் அக்கறையுடன் செயற்படு கிறேன். பிள்ளையார் சனசமூக நிலையத்தினரின் நேரடி வங்கி கணக்கு விபரம் இணைக்கப்பட்டுள்ளது.



வங்கி கணக்கு விபரம்

PILLAIYAR COMMUNITY CENTRE,
BANK OF CEYLON
KARAINAGAR- 749,
ACCOUNT NUMBER - 78206688


நன்றே செய் - இன்றே செய்
பிள்ளையார் சனசமூக நிலையம்
பற்றுச் சீட்டு
பதிவு இல:- / Regd No:- I/VC/16/CC/991
003
மருதடி, காரைநகர்.
08/08/2024
பெயர்: திரு திரவியநாதன் பிரமேந்திர தீசன்
முகவரி: நடுத்தெரு, காரைநகர்
விபரம்: அம்பாள் முன்பள்ளி கட்டிட நிதி
ரூபா: இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்
மட்டும் நன்றியுடன் பெற்றுக் கொண்டேன்
ரூபா: 250 000/=
பொருளாளர் ஒப்பம்









## நல்லார் ஒருவர் உளரேல்.!

காரைநகர் பிரதேச சபை செயலாளர் திரு.கி.விஜயேஸ் -வரன் அவர்கள் கடந்த மார்ச் மாதம் வளங்கிய உறுதியை அடுத்து காரைநகர் நீலிப்பந்தனையில் இருந்து மல்லிகை சேவகர் கோயில் வீதி அமைப்பதற் கான நடவடிக்கையினை துரித கதியில் மேற்கொண்டு ள்ளார்.





காரைநகர் பிரதேச சபைக்கு சொந்தமான மேற்படி வீதி கடந்த 50 ஆண்டுகளிற்கு மேலாக செப்பனிடப்படாத நிலையில் மிக மோசமாக பாதிப்படைந்திருந்தது. கடந்த மார்ச் மாதம் 08.03.2024 அன்று 'எனது ஊர் காரை நகர்' சார்பில் பிரதேச சபை செயலாளர் திரு.கி.வி ஜயேஸ்வரன் அவர்களை சந்தித்து மேற்படி வீதியின் நிலமைகளை தெரியப்படுத்தியதுடன் தற்காலிகமாக கண்ட கற்களை கொட்டி தீசன் திரவியநாதன் சொந்த செலவில் செப்பனிடப்பட்டது.

இதற்குரிய கண்ட கற்கள் திரு.பரந்தாமன் விஸ்வலி -ங்கம், திரு.தீசன் திரவியநாதன் ஆகியோரது வீடுகளில் இருந்து பெறப்பட்டதுடன், பிரதேச சபை இலவசமாக தமது உழவு இயந்திரத்தை வழங்கி இருந்தது.

பிரதேச சபை செயலாளர் திரு.கி.விஜயேஸ்வரன் அவர்களிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கு அமைய காரைநகர் நடுத்தெரு மற்றும் நீலிப்பந்தனை பிரதேச த்தில் செயற்படாது இருந்த மின்குமிழ்கள் அதற்குரிய உபகரணங்கள் 'எனது ஊர் காரைநகர்' சொந்த செலவில் வேண்டி வழங்கப்பட்டதையடுத்து கடந்த மாதம் அவற்றை செப்பனிட்டு ஒளிர வைத்துள்ளதுடன், தற்போது நீலிப்பந்தனையில் இருந்து செல்லும் மல்லிகை சேவகர் கோயில் வீதி அமைப்பதற்கு முதற்க ட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வாக்குறுதிய ளித்திருந்தார். அதற்குரிய நிதி கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கை எடுக்கப்படும் என அளித்த வாக்குறுதிக்கு அமைய தற்போது 41 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். அதற்குரிய ஒப்பந்த அறிவித்தல் 28.05.2024 யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் நாளிதள் பத்திரிகையூடாக வெளியிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்ற்ரன் கல்லூரிக்கு நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கம் ஊடாக நிதியுதவி

கடந்த செப்டெம்பர், 2024இல் நடைபெற்றிருந்த மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்ள யாழ்ற்ரன் கல்லூரியை சேர்ந்த ஏழு மாணவ ர்கள் கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. அதற்குரிய ஒழுங்குகளையும் நிதியுதவியினையும் வழங்க கல்லூ ரி நிர்வாகம் முன்வரவில்லையெனவும் அதற்குரிய நிதி உதவியினை வழங்கினால் கல்லூரியின் விளையாட் டுத்துறை மாணவர்கள் ஊக்கம் பெறுவதுடன் மேற்கொண்டு பயற்சிகளில் ஈடுபட ஏதுவாக இருக்கும் எனவும் நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தினர் 'எனது ஊர் காரைநகர்' தொகுப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

Sept 30, மற்றும் Oct 01, 2024 ஆகிய இரண்டு நாட்கள் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற Sir John Tarbat மெய்வல்லுனர் விளையாட்டு சாம்பியன்ஸ் போட்டியில் கலந்து கொள்ள போக்கு வரத்து செலவு மற்றும் உணவு செலவாக 70,000 ரூபா வரை நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தின ரின் வேண்டுகோளினையடுத்து " எனது ஊர் காரை நகர்" சார்பில் தீசன் திரவியநாதன் அந்நிதியை வழங்கி மாணவர்கள் கொழும்பில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட செல்வி ம.டர்சனா உயரம் பாய்தல் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்று பெருமை சேர்த்திருந்தார். கல்லூரி நிர்வாகம் அதனை பெருமையுடன் கொண்டாடி மகிந்தது.



## தெருநாயின் குரைப்பு. ….

அப்புவும் ஆச்சியும்
அவர்களின் மூதாதையரும்
புழுதி அளைந்த
எங்கள் ஒழுங்கையில்
நடந்து போகிறேன்
எங்கோ இருந்து வந்து
எங்கள் ஒழுங்கையில்
குந்தி இருக்கும்
நாயொன்று என்னைப்பார்த்து
உறுமுகிறது குரைக்கிறது…..

அதன் முகத்தில்
எவராலும் விளங்கமுடியாத
வன்மம்
வெறுப்பு
கோபம்
எரிச்சல்
எல்லாமே தெரிகிறது
பிறவிக் குணமாக
இருக்கக்கூடும்

என்னைக் கடித்துக்
குதறி விடுவேன்
எங்கிருந்தாலும் கடிப்பேன்
என்பது போல்
இருந்தது அதன்
வெறுப்புமிழும் குரைப்பு….

ஆயினும் எங்கள் ஒழுங்கையில்
நின்று குரைத்து
காணாமல் போன
கன தெரு நாய்களைப்
பார்த்தவன் என்பதனால் இந்த
நாயின் குரைப்புக்கு
நான் எடுபடவில்லை
நடந்து போகிறேன்….

என் புறக்கணிப்பு
நாய்க்கு இன்னும்
கோபத்தைக் கொடுத்து
இருக்க வேண்டும்
குடல் வெளியே வருமாப் போல்
குரைக்கிறது….

முகந்தெரியாத யாரோ
போட்ட எலும்பைக் கடித்த
உசாரில்த்தான் இந்த நாய்
குரைக்கிறது என்பது
எனக்குத் தெரியும் என்பதனால்
என்பாட்டில் நான்
நடக்கிறேன் ..
குரைத்த களைப்பில் நாய்
குப்புறப் படுக்கிறது…..
மீளவும்…



**தெருநாயின் குரைப்பை
பதிவு செய்தவர்
காரைக்கவி கந்தையா
பத்மானந்தன்**



காரைநகர் பிரதேச செயலகத்தின் அடுத்த
பிரதேச செயலராக செல்வி ந. ரஞ்சனா
அவர்கள் 24.01.2024 அன்று
பதவியேற்றுக்கொண்டார்.

வந்தோரை வாழ வைக்கும் காரை
மண்ணில் சிறப்புடன் பணியாற்றவும் மக்கள்
மனங்களில் பதவி காலத்தின் பின்னரும்
நீடித்து நிலைத்திருக்கும் வகையில் மக்களிற்கு
செயலாற்ற ‘எனது ஊர் காரைநகர்’
வாழ்த்துகிறது.

# நவரட்ணம் தர்மராசா (MGR) ஊரின் ஒரு வரலாற்று நாயகன்..!



நவரட்ணம் தர்மராசா (MGR) தமிழ் அரசியல் உணர்வாளர், காரை விளையாட்டுக் கழகத் தலைவர், சமூக சேவையாளர், MGR பேரபிமானி, தவில் கலைஞர்களின் பெரும் இரசிகர்... என்று பல அவர் பெயரில். அன்றிலிருந்து இன்று வரை எனது ஊரவனாக பகைவனாக சிறந்த நண்பனாக இருந்து 18-08-2024 இல்லை என்று ஆகி விட்ட MGR அண்ணன் பற்றி சில வரிகள்.

MGR இன் புகழ் பரப்பும் பெரும் அபிமானியாக இருந்ததால் MGR என்று அவர் அழைக் கப்பட்டார். தோன்றில் புகழொடு தோன்றுக என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க தோன்றி வாழ்ந்து தில்லைக் கூத்தன் திருப்பாதம் அடைந்தவர். அவர் ஒரு இடத்தில் இருக்கின்றார் என்பதையும் எளிதில் அறியலாம் அந்த இடத்தில் அவர் இல்லை என்பதையும் எளிதில் அறியலாம். ஒருவரின் ஆளுமை அவரது தோற்றத்திலும் நிறத்திலும் இல்லை என்பதற்கு இவர் ஒரு உதாரணம். குள்ளமான குண்டான பொது நிறமான ஒருவர். ஆனால், சுறுசுறுப்பான, எவரையும் சுலபமாக வசீகரிக்கும் தோற்றமும் கவருகின்ற பேச்சாற்றலும் உள்ள ஒருவர். தமிழ் அரசியல் தலைவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அவர் எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லாத விசுவாசமான தொண்டராக இருந்து வந்தார். 1970 களில் பல கூட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், கறுப்பு கொடி போராட்டங்கள் மற்றும் உண்ணாவிரத போராட்டங்கள் என்பவைகளை முன்னின்று நடத்தினார். அவர் இரத்த திலகம் வைத்த பல தமிழ் தலைவர்கள் அன்று இருந்தனர். அவரது அரசியல் போராட்டங்கள் காரணமாக பல தடவைகள் தாக்குதல்களுக்கும் உள்ளானார். இது 1980 களிலும் தொடர்ந்தது. நியாயத்தைப் பேசசென்றதற்காக இந்திய இராணுவத்தாலும் தாக்கப்பட்டார்.

காரைநகரில் கோவளம் விளையாட்டு கழகத்திற்கு பரம எதிரியாக இருந்தது காரை விளையாட்டுக் கழகம். MGR காரை விளையாட்டு கழகத்தின் தலைவர். கிறிக்கெற் என்று வந்தால் நாங்கள் இந்தியாவும் பாகிஸ்தானும் ஆக இருப்போம். உதைபந்தாட்டத்திலும் போர் தான். காரை விளையாட்டு கழகத்தின் முதுகெலும்பாக இருந்தார். கிறிக்கெற்றில் எங்களை விரைவாக கொண்டு போவது அவரது மெதுவான பந்து வீச்சு தான். சுமுக உறவில் முடிந்த போட்டிகள் குறைவு. Umpire அல்லது Referee ஆக வருகின்றவர் சில வேளை பரிதாபத்திற்குரியவர் ஆவார்.

காரைநகரின் மினி ஒலிம்பிக் போட்டியான பட்டு மாமாவின் வாரிவளவு நல்லியக்க சபை விளையாட்டு போட்டி முக்கியத்து வம் பெறவும் விளையாட்டு கழகங்கள் இடையேயான சமராக மாறவும் காரணமாக இருந்தார். இப் போட்டிகளின் போது உறவும் பகையும் உச்சத்தைத் தொடும். பெரும்பாலும் காரை விளையாட்டு கழகத்தின் பிரதான பேச்சாளராக MGR அண்ணை தான் இருப்பார். நாங்கள் சண்டை பிடித்தாலும் எங்களுக்கு இடையே கோபம் இருந்தது இல்லை. அடுத்த நாள் ‘அடே’ என்று அணைத்து கட்டிப்பிடிப்பார். அவர் காரை விளையாட்டு கழகத்தினை வளர்ப்பதற்கு தன் சொந்த பணத்தைச் செலவழித்தார். ஏனைய விளையாட்டு கழகங்களிலிருந்து பங்கேற்றவர்களை உபசரிப்பதற்கும் தனது சொந்த பணத்தைச் செலவழித்தார். காரைநகருக்கு வெளியே இடம் பெற்ற போட்டிகளில் காரைநகரில் உள்ள எல்லா விளையாட்டு கழகங்களிலும் இருந்து சிறந்த வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு அணியாக செல்வோம். பெரும்பாலும் அதற்கான பொறுப்பையும் செலவுகளையும் MGR அண்ணையே ஏற்றுக் கொள்வார்.

புகழ் பெற்ற தவில் கலைஞர்களுக்கு உயர் கௌரவம் கிடைக்கின்ற ஊர் காரைநகர். காரைநகர் கோயில்களில் தவில் கச்சேரிகள் இடம் பெற்றால் தவில் கலைஞர்களுடன் தானும் ஒருவராகி அவர்களுக்கு ஊக்கமளித்து கச்சேரியை போட்டி மிக்க பெரும் கச்சேரியாக மாற்றி விடுவார். சிறந்த காவடி ஆட்டக்காரரும், தவில் கலைஞரும் MGR அண்ணையும் சேர்ந்தால் அந்த இடம் கண்கொள்ளா காதுகொள்ளா பக்திகொள்ளா இடம் ஆகி விடும். காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேர்த் திருவிழா மற்றும் திருவிழா காலத்திலான அன்னதானம் என்பவைகளை கலை களை கட்டுபவைகளாக ஆக்குவார்.
அவர் காரைநகர், ஒட்டிசுட்டான் மற்றும் முத்தையன்கட்டு போன்ற பகுதிகளில் இருந்து பெறப்பட்ட விவசாய விளை பொருட்களுக்கு கொழும்பில் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் கொடுத்து விவசாயிகள் வாழ்வு வளம் பெறச்செய்தார்.
எமது பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான பால் முட்டி தயிர் முட்டி உடைப்பதை சிதம்பரா மூர்த்தி கேணியடியில் சிறப்புற நடாத்தி வந்தார். அன்னார் பல பொதுப்பணிகளில் ஈடுபட்டார். தன் பெற்றோர் நினைவாக அந்தியேட்டி மடத்தைக் கட்டினார்.

அவரிடம் நான் கண்டு வியந்தது அவரின் ஆளுமை. அவரின் ஆளுமை பற்றி இன்றைய மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டிப் புத்தகம் எழுதலாம். அவரது அரசியல் வாழ்விலும் பொது வாழ்விலும் எவருக்கும் விலை போகாதவராக தனது சுய இலாபங்களை தேடி போகாதவராக நியாயம் என்பதை எவருக்கும் அஞ்சாது பேசுபவராக இருந்தார். அன்னார் தனது இறுதிக் காலத்தில் நீர்கொழும்பில் வசித்து வந்தார். இருந்தாலும் அவரது ஊர் பற்று எந்தளவும் குறையவில்லை. வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமான, ஊரின் வரலாற்று நாயகன் ஒருவரான அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அன்னார் பெரிதும் வணங்குகின்ற ஈழத்து சிதம்பர ஆண்டி கேணி ஐயனாரைப் பிரார்த்திக்கின்றோம்.

- அ.சர்வேஸ்வரன் (பாபு)

## ஐங்கரன் என்னும் ஊரவன்..!



26.08.2024 அன்று விடிந்தும் விடியாத அதிகாலை பொழுதில் காரைநகர் மக்களிடத்தில் நம்ப முடியாத ஒரு செய்தி பரவியது. நம்ப முடியாமல் பலரும் பலரையும் தொடர்பு கொண்டு உண்மையென அறிந்தது முதல் காரை மண் மயான அமைதியில் உறைந்தது.

ஐங்கரன் பத்மநாதன் என்னும் ஒரு இளம் குடுப்பஸ்தன் அகால மரணச்செய்தி இரண்டுக்கு நாலு தடவை உறுதிப்படுத்த தோன்றியது. 25.08.2024 ஞாயிறு இரவு 8.30 மணியளவில் தனது மகனுடன் யாழ் Brown Road இல் வலம்புரி காரியாலயத்திற்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஐங்கரனை அதிவேகமாக வந்த முச்சக்கர வண்டி ஒன்று மோதித்தள்ளி குடை சாய்ந்தது. படுகாயமடைந்த நிலையில் யாழ் Northern வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐங்கரன் உயிர் வைத்தியர்கள் பலரது கண் முன்னே அதிகாலை 3.30 மணியளவில் பிரிந்தது.

ஆகஸ்ட் மாதம் தனது 50வது பிறந்த நாளினை வெகுவிமர்சையாக யாழ் நகரில் கொண்டாடிய ஐங்கரன் காரைநகரின் முதல் இணையத்தள ஊடகவியலாளர் என்னும் பெருமைக்குரியவர். ஊர் மண்ணின் மீது அளவிலா அன்பு கொண்டவர். 2005ம் ஆண்டு முதல் காரை மண்ணின் செய்திகளை வெளியுலகத்திற்கு கொண்டுவர கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக தீசன் திரவியநாதன் ஆகிய என்னால் ஊடகவியலாளராகவும் மறுஅவதாரம் பெற்றுக்கொண்டவர்.

“எனது ஊர் காரைநகர்“ தனித்து செயற்பட்ட போதும் கடந்த வாரம் வரை என்னோடு தொடர்பில் இருந்தவர். கடந்த பத்து ஆண்டுகளில் ஐங்கரன் அவர்கள் மக்களிற்காக ஆற்றிய சேவைகள் பல. சமூகமாக எந்த பிரச்சனைகளை கையாள வேண்டுமாயின் ஐங்கரனை தொடர்பு கொண்டால் போதும்.

ஐங்கரனே கடந்த வாரம் உன்னோடு பேசிய போது உன்னால் மட்டும் முடிந்த இன்னொரு பணியினையும் கொடுத்தேனே முடிக்காமல் சென்றுவிட்டாய். ஐம்பது வயது என்பது ஆபத்தான வயது போலும். கடந்த வருடம் கனடா வந்தாய், வீட்டிற்கு வந்தாய் விடிய விடிய கதைத்திருந்தோம். இடையிலேயே விட்டு விட்டு போய்விட்டாய். காலனவன் காத்திருந்து உன்னை கவர்ந்து சென்றுவிட்டான்.

உன்னோடு பேசிய பொழுதுகள், ஊரிற்காய் நீ செலவு செய்த நேரங்கள், எனக்காக நீ செய்த தியாகங்கள் எனக்கும் உனக்கும் மட்டுமே தெரிந்த ஊர் விடயங்கள் எப்போதும் இனி உயிர் பெறப்போவதில்லை. நீ எல்லாவற்றிலும் கெட்டிக்காரன். ஐம்பது வயதிலே அனைத்தையும் பெற்றவன் என்பாய். அதற்குள்ளே மரணத்தையும் பெற்றுவிட்டாய். ஐங்கரா நீ விட்டுச்செல்லும் வலிகள் ஏராளம். நீ இல்லாத காரைநகர் நிறையவே இழந்து நிற்கும்.



‘எனது ஊர் காரைநகர்’ சார்பிலும் காரைநகர் மக்கள் சார்பிலும் அன்னாரது குடும்பத்திற்கும் அன்னாரை பிரிந்து வாடும் நண்பர்கள், ஊரவர்களிற்கும் ஆறுதலை கூறிக்கொள்வதுடன் அன்னாரது புனித ஆத்மா எல்லாம் வல்ல இறைவன் திருப்பாதங்களில் அமைதி கொள்ளவும் பிரார்த்திப்போமாக.!

## தீவு ஒன்று நகரான கதை...

2023 கனடா காரைவசந்தம் நிகழ்வில் எழுதி வாசித்தவர்: தீசன் திரவியநாதன்



என் இனிய ஊரே காரை
மண்ணே
கவிபாடி நான் களிக்க தமிழ் தந்த
என் தாயே உனக்கு முதல்
வணக்கம்

பெற்றதாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையை பெரும் தாய்
மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
இன்னும் பற்பல நாள் இருந்தாலும்
இக்கணம் தனிலே இறந்தாலும்
துண்ணும் வான் கதிகே புகுந்தாலும்
சோர்ந்து மாநகரத்துள் உழன்றாலும்
என்னமே இங்கு எனக்கு வந்தாலும்
எனக்கு யாது செய்தாலும்
எங்கள் ஊரை மறவாது இங்கே
கூடி வந்திருக்கும் காரை தீவார்க்கு
முதல் வணக்கம்

தீவொன்று நகரான கதை
காரையின் உயிராய், சைவக்கருணையின்
உருவாய், இந்த ஞாலமே வணங்கும்
ஈழநாட்டருள் ஊற்றுள் ஒன்றாய், ஞானத்தின்
பொருளாய், எங்கள் நம்பிக்கை முதலாய்,

வியாவிலில் வந்துதித்த ஐயனின் தயவால்
திண்ணபுரத்தில் தோன்றிய
தில்லை கூத்தனின் திருவடி
பணிந்து நிற்போம்

வாழ்ந்தவர் கோடி இறந்தவர் கோடி
ஊரில் உயர்ந்தவர் கோடி
மக்கள் மனங்களில் நின்றவர் பாதி
மண் மீது பற்று வைத்து மரணத்தை
வென்றவர்கள் சிலரே.

நூறு ஆண்டுகள் பெயர் பெயர் கொண்ட
காரைநகர் அதற்கு முன்னர் காரைதீவு –
வெள்ளையனும் ஆண்டான்
விட்டுப்போனதைவிட எடுத்துச்சென்றவை
ஏராளம் போனவை போகட்டும் எஞ்சியது
கோவளம் வெளிச்ச வீடு
ஆயிலிக்கோர் ஆலயம்



கோவளம் வெளிச்ச வீடு
ஆயிலிக்கோர் ஆலயம்.

மேற்கு கடற்கரையின் ஆழம் கண்ட
வெள்ளையன் கண்டு சொன்ன
வெளிநாட்டு வாணிபம் இன்றுவரை நடக்கவில்லை.

வெள்ளையனுக்கு முன்னர்
ஒல்லாந்தரும் வந்தனர்
நல்லாக பெயர் வைத்தனர்
அம்சடாம் என அழைத்து நின்றனர்
நிலைக்கவில்லை
நிலைத்தது என்னவோ
கமன் கீல் கடல் கோட்டை



அழித்தது வியாவில் ஐயானார் கோயில்

ஒல்லாந்தனுக்கும் முன்னர்
போத்துக்கீசர் விட்டானா அவனும்
வைத்தானே பெயர் கரட்டிவ்,
காரைநகரிற்கு அன்றொரு நாள்
கரட்டிவ் என்றொரு பெயர்
ஆயிரத்து ஐநூறுகளில் அந்த பெயரும்
இருந்தது நிலைத்ததா அதுவும்
போதும் போதும் பின்னோக்கி பின்னோக்கி
சென்றது போதும்..

முன்னே சென்று என்ன நடந்தது என்று
பார்த்தால்... ஆயிரத்து
தொளாயிரத்து இருபத்து மூன்று
காரை தீவு காரைநகரானது
பத்து காரணிகள் சேர்ந்து
புத்தாக புதிய பெயர் பெற்றது

பொன்னாலைக்கு அப்பால்
மேற்கில் தோன்றிய மெல்லிய கோடு
காரைநகர் என விலாசம் கொண்டது

டுனைவன் துரை, ஆறுமுகநாவலர்
சேர் பொன் இராமநாதன் இவற்றோடு
அஞ்சல் துறை இது மட்டுமா
அதற்கு முன்னர் கடலுக்கு நடுவில்
கல் தெரு போட்டனர்
தீவு ஒன்று நகராக
யாழ் நகரோடு ஒன்றானோம்.

வரலாறு சொல்லும் செய்திகள் பல
காட்டாறு போல கடந்து செல்லும்
வாழ்வு தனில் கிடைத்ததை பிடித்துக்கொண்டு
பெருமையோடு நாம்
அருணாசலம், அம்பலவாணர்,
காசிப்பிள்ளை வாத்தியார் இவர்களுடன் சயம்பர்
அருணாசலம் உபாத்தியாயர்
ஆரம்பித்தார் சைவ கலாசாலைகள்
அம்பலவாணர் அல்லின் ஏப்பிரகாமாய்
ஆகாசத்தில் அம்பலமானார்.
சாமுவேல் பாதிரியார் ஆரம்பித்த
பாடசாலைகள் அமெரிக்கன் மிஷன்
ஆரம்ப பாடசாலைகளாய்
அன்றும் இன்றும் என்றும் காரைநகரில்
கல்விசாலைகளை நிறுவியதால்
பெயர் கொண்டனர்..

தொடர்ந்தனர் இன்றும் தியாகாராசா.. ஆம்
ஆவன்னா தியகராசா ஆறுமுகம் தியாகராசா
படித்தது பொருளாதாரம் பட்டமும் பொருளியல்
அருளியல் பெற்று வளரந்தார்
சயம்பர் கண்ட காரை இந்துவை
கனவோடு சுமந்து நின்றார்

கல்விக்கே என்றும் எப்போதும்
முன்னுரிமை எங்கள் காரை ஊரில்
காந்தியம் வளர்த்தார்
சபர்மதி இல்லம் மறந்தே போனது
வாரதா குருகுலம் நினைவிலும் இல்லை
வாழ்விலும் இல்லை
நேருவும் வந்தார்
சரஸ்வதி இல்லம் முன்னாள்
உள்ள சைவ மகா சபைக்கு...




சரஸ்வதி இல்லம் மறந்து
போனது
சைவ கனி தந்த கிருபா-
னந்தவாரியார்
காரை மண் வந்தார்
பேப்பர் சுவாமிகள்
உள்ளதை சொன்னார்
கேளாதவர் பேச்சில்
கோயிலை இடித்து
குட்டி சுவாராகினர்
யோகரும் வந்தார் பூச்சி ஒன்று உள்ளே இருப்பதாய்
சொன்னார்
ஆச்சி சொன்ன கதைகளில் அதுவும் ஒன்று.
பொருளாதாரம் இன்று கோயிலில் உண்டாம்
கோயிலை வளர்த்து பொருளாதாரம் காண்போம்
படித்தவர் சிலர் இடித்தது சிவன் கோயில்
பழமொழி அல்ல புதுமொழியும் அதுவே

நல்லிணக்கம் காணவே நல்லியக்க சபை
என்னும் பட்டுமாமா அறிவுக்கூடம்
விட்டு விலகாத ஞாபகங்கள்
வாரிவளவில் பொதிந்துள்ளன

அபிவிருத்தி காண தில்லையம்பலம்
அரசியலில் மகேஸ்வரன்
களபூமியில் கலையரங்கு காண
சிவா மகேசன்
எல்லோரும் வளர்த்தது கல்வியே

எட்டுத்திக்கும் பாலத்தினூடக பறந்து வந்தவர்
நாடெங்கும் ஊரை வளர்த்தனர்
இவட்டைகளும் அவட்டைகளும்
போட்டியோடு வளர்த்தனர்

வேலையே விதியென்று வாழ்ந்து
வீழ்ந்துவிடாமல் பாரினில்
ஊரே சிறந்தது என விழாவினில் நீங்கள்
உங்களோடு நாங்கள் மீண்டும் இங்கிருந்து
காரைநகர் காணப்போகும் அடுத்த நூற்றாண்டு
மாற்றத்திற்காய் காற்றோடு தூதுவிடும்
'எனது ஊர் காரைநகர்'
வசந்தமாய் வீசட்டும்,
வாழ்வியல் பொங்கட்டும்...

- தீசன் திரவியநாதன் - 2023

எனது ஊர் காரை நகர்
www.karaiNEWS.com

**" எனது ஊர் காரைநகர் " karainews.com இன் 2024ல் கல்விப்பணி ..!**

## யாழ்ற்ரன் மாணவிக்கு மூன்று வருடங்களிற்கு கல்வி உதவித்தொகை...

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் தரம் 7 கல்வி பயிலும் மாணவியும், மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியில் பாடசாலைக்கும் மண்ணிற்கும் பெருமை தேடித்தந்த மாதடையை சேர்ந்த மாணவிக்கு தீசன் திரவியநாதன் தம்பதிகளின் 50வது பிறந்த நாள் நிரந்தர வைப்பான 50 இலட்சம் ரூபாய்களில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டிப்பணத்தில் இருந்து அடுத்து வரும் மூன்று ஆண்டுகளிற்கு மாதாந்தம் 10,000 ரூபா வழங்கும் வகையில் 03.08.2024 காரைநகர் NSB வங்கியூடாக standing order வழங்கப்பட்டது.

இதற்கான வேண்டுகோளை விடுத்த திரு.குருபரன் சுப்பிரமணியம் மற்றும் இந்த செயற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் காரைநகர் பிரதேச செயலக செயலர் ஆகியோர் கலந்து கொள்ள 03.08.2024 புதன்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் மாணவியிடம் கையளிக்கப்பட்டது.

16.06.2024 அன்று 'எனது ஊர் காரைநகர்' முகநூலில் தெரிவிக்கப்பட்டதற்கு அமைய 03.08.2024 காரைநகர் மாதடையை சேர்ந்த யாழ்ற்ரன் கல்லூரி மாணவிக்கான அடுத்து வரும் மூன்று ஆண்டுகளிற்கான கல்வி ஊக்குவிப்பு நிதி சட்டப்படி வழங்கி வைக்கப்பட்டது.

ஊரிற்கும் மண்ணிற்கும் மக்களிற்கும் உடனடி பயன் தரும் வகையில் "எனது ஊர் காரைநகர்" இந்த ஆண்டு 2024 இல் செயற்படுத்தும் ஐந்தாவது திட்டமாகவும் ஊர் பெயரால் இயங்கும் காரை அமைப்புக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் செய்வதை சொல்வதும், சொல்வதை செய்வதிலும் " எனது ஊர் காரைநகர்" கடந்த 15 ஆண்டுகளில் 100% கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றி வருவது சிந்தனை உள்ளவர்கள் திரும்பி பார்த்து அறிந்து கொள்ளப்பட வேண்டியது.



## காரை இந்து மாணவனிற்கு கல்வி உதவி ...

காரைநகர் இந்துக்கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவனின் கற்றல் செயற்பாடு மற்றும் குடும்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பாடசாலை கல்வி சமூகத்தினால் மாணவனிற்கான உதவி கோரி வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. இதனை ஏற்று 'எனது ஊர் காரைநகர்' முகநூல் ஊடாக 23.08.2024 அன்று அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதனையடுத்து உடனடியாக உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் காரை உள்ளங்களுடன் வேறும் பலரும் உதவிகளை வழங்க முன்வந்தனர்.

தொடர்ச்சியாக அடுத்து வரும் மூன்று ஆண்டுகளிற்கு உதவிகளை வழங்கும் பொருட்டு பகுதி பகுதியாக தங்களது உதவிகளை வழங்க முன்வந்ததுடன் உடனடியாக காரை இந்து பழைய மாணவர் சங்க வங்கி கணக்கிற்கு தமது நிதியுதவியை அனுப்பியும் வைத்தனர்.

உதவ முன்வந்தவர்களும் இதுவரை அனுப்பி வைக்கப்பட்ட தொகை விபரமும்..

1. கலாநிதி ஆறுமுகம் நல்லநாதன்(இலண்டன்) - 240.000(60,000) ரூபா
2. ரகுநாதன் சிவபாதசுந்தரம்(கனடா) - (75,000) ரூபா
3. விக்கினேஸ்வரன் இராமச்சந்திரன் (கொழும்பு) - 24,000(18,000) ரூபா
4. சிறிகரன் இந்திரன் 24,000
5. Mr.G.S (கனடா, ஆயிலி) 48,000 ரூபா
6. தீசன் திரவியநாதன் 24,000(12,000) ரூபா

(அடைப்புக்குறிக்குள் உள்ள தொகை பழைய மாணவர் சங்க கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது)

10.11.2024 வரை 165,000 ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஆகஸ்ட் 2024 முதல் மாதாந்தம் மாணவனுக்கான மாதாந்த உதவி தொகையாக 10,000 ரூபா வழங்கப்பட்டு வருவதாக கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் திரு. நிமலன் கணபதிப்பிள்ளை, பொருளாளர் திரு.சுகந்தன் சண்முகம் ஆகியோர் அறியப்படுத்தியுள்ளனர்.

## காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தை பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்பு தொகை

காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தை பயன்படுத்தி பயனுறவைக்கும் வகையில் தீசன் திரவிய நாதன் தம்பதிகளினால் 2023ம் ஆண்டு தனிப்பட்ட வகையில் 50 இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இடப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெறும் மாதாந்த வட்டி பணத்தினை காரைநகர் அபிவிருத்தி சபை மாண வர் நூலகத்தினை பயன்படுத்தும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் வழங்கப்படுகினது.

அதன் அடிப்படையில் கடந்த ஆண்டு 25 மாணவர் களிற்கு தலா 2,000 ரூபா வீதம் 'எனது ஊர் காரை நகர்' நடாத்திய நிகழ்வு மூலம் வழங்கப்பட்டது, நூலக சுற்றுப்புறம் இரண்டு தடவைகள் சுத்திகரித்து வசதி செய்து கொடுக்கப்பட்டது. மேலும் 2024ம் ஆண்டு நூ லகத்திற்கு கிரமமாக தமது மாணவர்களை அழைத்துச் சென்ற அம்பாள் முன்பள்ளி மற்றும் சிவகௌரி முன்பள்ளிகளிற்கு ஊக்குவிப்பாக தலா 25,000 ரூபா வழங்கப்பட்டது. மேலும் தொடர்ச்சியாக மாணவர் நூ லகத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்ல ஊக்குவிப்பு அளித்துவரும் முன்பள்ளிகளிற்கு உதவித்தொகை வழங்கப்படும் என்பதனையும், தொடர்ந்து மாணவர் நூலகத்தை பயன்படுத்தி வரும் மாணவர்கள் இனம் காணப்பட்டு 'எனது ஊர் காரை-ரநகர்' நடாத்தும் விழாக்களின் போது உதவித்தொகை வழங்கப்படும் என்பதனையும் அறியப்படுத்தப்படுகின் றது.

2023.05.05 முதல் அடுத்து வரும் பத்து ஆண்டுக ளிற்கு தீசன் திரவியநாதன் தம்பதிகளினால் தனிப்பட்ட வகையில் வைப்பில் இடப்பட்டுள்ள 50 இலட்சம் ரூபாய்களில் இருந்து கிடைக்கப்பெறும் மாதாந்த வங்கி வட்டி பணம் அண்ணளவாக 60,000 ரூபாய்கள் காரைநகர் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளிற்காக வழங்கப்படும் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றேன்.









## பேராசிரியர் வே.தர்மரட்ணம் அறக்கட்டளை அங்குரார்ப்பணம்





17.09.2024 அன்று காரைநகரில் V.T.Trust என்னும் உதவிக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. வாழ்நாள் பேராசிரியர் திரு.வே.தர்மரட்ணம் அவர்களது சம்பந்தர்கண்டி வீட்டில் மேற்படி அங்குரார் -ப்பண நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கணிதவியல் பேராசிரியராக கடமையாற்றியவரும், வாழ்நாள் பேராசிரியராக யாழ் பல்கலைக்கழகத்தில் பணிபுரிபவருமான திரு.வே.தர்மரட்ணம் அவர்கள் தனது 90வது வயதுக-ளில் தனது கொழும்பிலும் காரைநகரிலும் உள்ள சொத்துக்களை கல்வி மற்றும் சமய வளர்ச்சிக்கு வழங்கும் பொருட்டு தனது பெரில் V.T.Trust என்னும் அமைப்பை 17.09.2024 அன்று நிறுவி அதனூடாக வழங்கியுள்ளார்.

வசதியற்ற மாணவர்களின் கல்விக்காகவும் சமய வளர்ச்சிக்காக குறிப்பாக ஈழத்து சிதம்பரத்தின் மேம்பாடுகளை முன்னிறுத்தி V.T.Trust அமைக்கப்பட் டுள்ளதாக இதனை முன்னின்று செயற்படுத்திய DR.நடராஜா ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார். V.T.Trust அமைப்பில் Mr. S.Selvarajah as Secretary, Prof R. Kapilan as Treasurer, Mr.T.Parameswaran, Dr. N. Jeyakumar ஆகியோர் அங்கத்தவர்களாகவும், காரைநகர் ஈழத்து சிதம்பர ஆதினகர்த்தாக்களில் ஒருவரான திரு.சுந்தரலிங்கம் குகநேசன் அவர்கள் காப்பாளராகவும் பணியிடப்பட் டுள்ளதுடன், Mr.N.Govarthan Attorney at Law அவர்கள் மேற்படி அமைப்பின் சட்ட ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி பேராசிரியர் வே. தர்மரட்ணம் அவர்கள் கொழும்பிலும் காரைநகரிலும் உள்ள சொத்துக்களை காரைநகர் மண்ணின் மக்களின் மேம்பாட்டிற்காக தனது காலத்திலேயே வழங்கி பெரும் நிறைவு பெற்றுள்ள செயலினை வாழ்த்தி இவ்வமைப்பின் ஊடாக சிறந்த பணிகளை ஆற்றுவதற்கு V.T.Trust அமைப்பினை வாழ்த்துவோமாக.

**கட்டுரை போட்டியில் பரிசு பெற்ற ஆக்கங்கள் :**

"எனது ஊர் காரைநகர்" சேவையாளர் கௌரவம் விழாவினை முன்னிறுத்தி நடாத்திய கட்டுரை போட்டிக்கு 'காரைநகர் அபிவிருத்தி சபை' என்னும் தலைப்பினை வழங்கியிருந்தது.

25,000 ரூபா பரிசு பெறுபவர்: செல்வி செல்வகுமார் கனிஷ்கா தரம் 9, மானிப்பாய் மகளிர் கல்லூரி

## காரைநகர் அபிவிருத்தி சபை



காரைநகர் அபிவிருத்தி சபை 2005.01.13ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது தலைவராக சடையாளியை சேர்ந்த புலவர் வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்களும், செயலாளராக அமரர் திரு.ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர் அவர்களும், பொருளாளராக திரு.தெட்சனாமூர்த்தி லிங்கேஸ்வரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் உபதலைவராக அன்றைய யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு.ந.பரமசிவம் அவர்களும், உபசெயலாளராக திரு.சபாரத்தினம் இராசநாயகம் அவர்களும், நிர்வாக சபை உறுப்பினர்களாக காரை இந்து அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, உபஅதிபர் திரு.கா.குமாரவேலு, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய அதிபர் திரு.சு.கணேசமூர்த்தி, Dr.S.நடராசா அவர்களுடன் பத்து நிர்வாக சபை உறுப்பினர்களுடன் காரைநகர் அபிவிருத்தி சபை ஆரம்பமானது.

**செல்வி கனிஷ்கா செல்வகுமார் தரம் 9 இல் கல்வி பயிலும் காரைநகர் மாணவி. சிறுவயதில் இருந்தே பேச்சு போட்டிகள், கட்டுரை போட்டிகள், சமய போட்டிகள், கலை விழாக்களில் கலந்து பல பரிசுகளை பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.**

1991ம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக காரைநகரில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான காரைநகர் மக்கள் 1996ம் ஆண்டு மீளகுடியேற்றத்தின் பின்னர் காரைநகரை மீளக்கட்டியெழுப்ப பல வழிகளிலும் தலைப்பட்டனர். வெளிநாடுகளிற்கு இடம்பெயர்ந்த காரைநகர் மக்கள் அக்காலப்பகுதியில் கனடாவில், கனடா காரை கலாசார மன்றம், பிரித்தானியாவில், பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம், சுவிற்சலாந்தில், சுவிஸ் காரை அபிவிருத்தி சங்கம், பிரான்ஸ்சில், பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம், அவுஸ்திரேலியாவில், அவுஸ்திரேலியா காரை கலாசார சங்கம் எனவும் உருவாக்கி அந்தந்த நாடுகளில் காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை ஒன்றிணைத்து செயற்பட்டு வந்தனர். அதற்கு முன்னர் கடந்த நூற்றாண்டில் 1925ம் ஆண்டு காலப்பகுதியில் காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வேலை வாய்ப்பு கருதி மலேசிய நாட்டிற்கு சென்ற காரைநகர் மக்கள் மலேசியாவில், மலேய காரை யூனியன் என்ற அமைப்பை உருவாக்கி செயற்பட்டு வந்ததும் அறிந்து கொள்ளப்படுகின்றது.



இந்த நிலையில் வெளிநாடுகளில் இடம் பெயர்ந்து காரைநகர் அமைப்புக்களை உருவாக்கி ஒன்றிணைந்து செயற்பட்ட காரைநகர் மக்கள் தமது தாய் மண்ணிற்கும் தமது அமைப்புக்கள் ஊடாக அபிவிருத்திகளையும் கலாசார பண்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு காரைநகரில் ஒரு அமைப்பு தேவை என்பதை உணர்ந்து கொண்டார்கள். அதற்கு செயல் வடிவம் கொடுக்க சுவிஸ் காரை அபிவிருத்தி சபை முன்வந்தது. அத்துடன் அப்போதைய தலைவர் திரு.நல்லதம்பி சரவணப்பெருமாள் அவர்கள் 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் காரைநகர் வருகைதந்து காரைநகர் இந்துக்கல்லூரி நடராஜா மண்டபத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர் நலன்விரும்பிகளென பலரையும் வரவழைத்து திட்டமிடப்பட்டு, காரைநகர் அபிவிருத்தி சபை உருவாக்கம் பெற்றது. 2005.01.26 அன்று காரைநகரில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக காரைநகர் அபிவிருத்தி சபை இயக்கம் பெற்றது.

முதலாவது நிர்வாக சபையில் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் அவர்கள் காரைநகர் அபிவிருத்தி சபையின் செயற்பாடுகளில் அதீத அக்கறையுடனும் இடம் பெயர்ந்த நாடுகளில் உள்ள காரைநகர் அமைப்புக்களுடனும் நேரடியாக தொடர்புகளை மேற்கொண்டு பலவித அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்திருந்தார். காரைநகர் பொது வைத்தியசாலை மேம்பாடு, காரைநகர் மக்களின் குடிநீர் பிரச்சனை, காரைநகர் மாணவர்களின் கல்வி மேம்பாடு, விவசாயத்தை ஊக்குவித்தல் என்பவற்றில் அக்கறையுடன் தனது ஆர்வத்தை செலுத்தி வந்தார்.



முதலாவது தலைவர்: புலவர் வேலுப்பிள்ளை குமாரசாமி

காரைநகர் பொது வைத்தியசாலை மீளகுடியேற்றத்தின் பின்னர் முதன் முதலாக சுவிஸ் காரை அபிவிருத்தி சபையின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டதுடன், காரைநகர் மக்களின் குடிநீர் பிரச்சனையை ஒரு தீர்வுக்கு கொண்டுவரும் வகையில் தண்ணீர் பௌசர்கள் ஊடாக குடிநீர் வழங்க பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் வழிவகை செய்திருந்தார். பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள விவசாய வாய்க்கால்களை செப்பனிட்டு மதகுகள் புனரமைக்கப்பட்டன. காரைநகர் மாணவர்களின் கல்வி வளர்சியை மேம்படுத்தவும் கல்விக்கான உதவிகளை பெற்றுக்கொடுக்கவும் கனடா காரை கலாசார மன்றத்தை அணுகி அதனூடாக பாடசாலைகளிற்கு தேவையான அபிவிருத்திகளையும், மாணவர்களிற்கு கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவுகளையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. காரைநகரில் உள்ள பிரதான வீதிகளில் மின்விளக்குகளை பொருத்தியமை, வலந்தலை சந்தியில் பயணிகள் நிழல்குடை அமைத்தமை என்பவற்றுடன் நவீன வசதிகளை கொண்ட நூலகம் அமைத்தல், வலந்தலை சந்தியில் வரவேற்பு அலங்கார வளைவு அமைத்தல் தொடர்பான பணிகளை முன்னெடுக்கவும் திட்டங்களை முன்மொழிந்திருந்தார்.



முதலாவது செயலாளர்: திரு.ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்

2008.03.13 அன்று காரைநகர் அபிவிருத்தி சபையின் செயலாளராக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்த திரு.ஜெ.தில்லையம்பலவாணர் அவர்கள் இயற்கையெய்தினார். அதன் பின்னர் உபதலைவராக பணியாற்றிய திரு.ந.பரமசிவம் அவர்களது தலைமையில் இரண்டு ஆண்டுகள் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளதும், பின்னர் 2010.09.19 அன்று காரைநகர் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு.த.ஜெயசீலன் தலைமையில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் தலைவராக திரு.க.சோமசேகரம் அவர்கள் தலைவராகவும், திரு.இ.ஜெயராசா செயலாளராகவும், திரு.ப.சற்குணராசா பொருளாளராகவும், உபதலைவராக திரு.மு.லட்சுமணன், உபசெயலாளராக திரு.நா.பாலகிருஸ்ணன் அவர்களுடன் திரு.இ.ஜெயராமன், திரு.க.இராயச்சந்திரன்(அப்பு), திரு.சி.கந்தசாமி, திரு.இ.திருப்புகழூர்சிங்கம், திரு.ச.நேசேந்திரம், திரு.செ.அருட்செல்வம், திரு.க.பிரதீபன், திரு.இ.பே.ச.நாகரத்தினம், திரு.சோ.விக்கினேஸ்வரன், திரு.ப.ஐங்கரன் ஆகியோரும் நிர்வாக சபையில் இடம்பெற்றிருந்தனர்.

தொடர்ந்து 2013.01.06 நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் தலைவராக திரு.சிவாமகேசன், செயலாளராக திரு.இ.திருப்புகழூர்சிங்கம் அவர்களும், பொருளாளராக திரு.ந.பாரதி அவர்களும், உபதலைவராக திரு.வே.முருகமூர்த்தி அவர்களும், உபசெயலாளராக திரு.வே.சபாலிங்கம் அவர்களும் அத்துடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

2019.08.11 அன்று திரு.இராமநாதன் சிவசுப்பிரமணியம் தலைவராகவும், செயலாளராக திரு.சுப்பிரமணியம் செந்தூரன், பொருளாளராக திரு.சின்னத்தம்பி பரம்தில்லைராசா, உபதலைவராக திரு.கணேசபிள்ளை அருள்ராசா, உபசெயலாளராக திரு.கை.நாகராசா அவர்களும் மற்றும் திரு.வரதராசா சிறிரங்கன், திரு.விக்கி - னேஸ்வரன் ஜெயகாந்தன், திரு.இ.திருப்புகழூர்சிங்கம், திரு.நித்தியானந்தம் சபேசன், திரு.வேலுப்பிள்ளை மாணிக்கம், திரு.கந்தசாமி விக்கினேஸ்வரன், திரு.வே.சபாலிங்கம், திரு.நா.பாலகிருஸ்ணன், திரு.ஆண்டிஐயா அருள்ராசா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.




காரைநகர் அபிவிருத்தி சபையின் கடந்த கால செயற்பாடுகள் ஊடாக காரைநகர் கடந்த 20 ஆண்டுகளில் பல்வேறு அபிவிருத்தி பணிகளுடன் பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் கல்விக்கு வழிகாட்டியாக செயற்பட்டதுடன் பலரது அடிப்படை வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கு வழிசமைத்துள்ளது. காரைநகர் புதுறோட் சந்தியில் மாணவர் நூலகம், பாலாவோடை தோப்புக்காடு பகுதியில் வீடற்றோரிற்கு

காணி வழங்க நிலமும், காரைநகர் பாடசாலைகளிற்கான நிரந்தர வைப்பாக ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களும் மற்றும் இதர தேவைகளிற்காக 30 இலட்சம் ரூபாய்கள் வரையான நிரந்தர வைப்பு நிதியினையும் குடிநீர் வழங்கும் தண்ணீர் பௌசர்கள் உட்பட்ட சொத்துக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கி வருகின்றது.

2024 ஆரம்பம் முதல் காரைநகர் அபிவிருத்தி சபையின் நிர்வாக செயற்பாடுகளில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள போதிலும் காரைநகர் பிரதேச செயலகத்தின் தலையீட்டின் மூலமாக தற்காலிக நிர்வாகம் திரு.விஸ்வலிங்கம் ஹம்சன் தலைமையிலும், திரு.பொ.பரந்தாமன் செயலாளராகவும், திரு.சின்னத்தம்பி பரம்தில்லைராசா பொருளாளராகவும் கொண்டு அடிப்படை நிர்வாகத்தினை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து காரைநகர் அபிவிருத்தி சபை மீண்டும் நிரந்தரமான நிர்வாக சபை அமையப்பெற்று, வெளிநாடுகளில் வதியும் காரை மக்களின் உதவிகளோடு காரைநகரினை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்ல வழி பிறக்கும் என்கின்ற நம்பிக்கையோடு, 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகை நடாத்திய கட்டுரை போட்டியில் பங்குபற்ற இடம் தந்த திருவாளர் தீசன் திரவியநாதன் அவர்களிற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி.

செல்வி: செல்வகுமார் கனிஷ்கா
தரம் 9, மானிப்பாய் மகளிர் கல்லூரி

**கட்டுரை போட்டியில் பரிசு பெற்ற ஆக்கங்கள்:**

"எனது ஊர் காரைநகர்" சேவையாளர் கௌரவம் விழாவினை முன்னிறுத்தி நடாத்திய கட்டுரை போட்டிக்கு 'காரைநகர் அபிவிருத்தி சபை ' என்னும் தலைப்பினை வழங்கியிருந்தது.

15,000 ரூபா பரிசு பெறுபவர்: பவதாரணி சத்தியநாதன்

**காரைநகர் அபிவிருத்தி சபை**

இலங்கையின் வடக்கு பகுதியில் யாழ்ப்பாண நகரத்திற்கு வடமேற்கு பகுதியில் காரைநகர் அமைந்துள்ளது. கடல்வளம், துறைமுகம் என்பவற்றையும் தமிழர் பாரம்பரியத்தையும் எடுத்தியம்புகின்றது. குறித்த பிரதேசத்தில் பல அமைப்புக்கள் காணப்படினும் தனக்கே உரித்தான தனித்தன்மையைக் கொண்டு காரைநகர் அபிவிருத்தி சபை 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, காரைநகர் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதனை பிரதான நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. 1991ல் இடப்பெயர்வினால் காரைநகரின் பல கட்டமைப்புக்கள் முற்றாக மாற்றம் பெற்றன. 1996இல் மீளக்குடியேறிய போது மந்தகதியில் கட்டமைப்புக்கள் செயற்படத்தொடங்கின. அந்த நிலமையினை உணர்ந்து கொண்டு பிரதேசத்தினுடைய சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலையினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு காரைநகர் அபிவிருத்தி சபை தோற்றம் பெற்றது.



**செல்வி பவதாரணி சத்தியநாதன்**

அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களின் திட்டமிடல் செயற்பாடுகளினாலும் தலைவர், மற்றும் நிர்வாக சபையினரின் ஒத்துழைப்போடும் அசாதாரண சூழ்நிலைகளின் போதும், மக்களின் தேவை உணர்ந்தும் காரைநகர் அபிவிருத்தி சபை வெளிநாடுகளில் வதியும் இடம் பெயர்ந்த காரைநகர் மக்கள் இடத்தில் பெரும் வரவேற்பை பெற்று வளர்ந்து வந்தது. பொதுக்கூட்டம், பொது நிகழ்ச்சிகள் மூலம் சபையின் திட்டத்தினை முதன்மைப்படுத்தி ஜெ.தில்லையம்பவாணர் 2005 முதல் 2008 இறக்கும் வரை பல செயற்பாடுகளை நிறைவேற்றப்பட்டன. குடிநீர், தெரு விளக்குகள் பொருத்துதல், வயல், விளைச்சல், வாய்க்கால் மதகு புனரமைப்பு, நெல் உற்பத்தி அதிகரிப்பு போன்ற அளப்பரிய செயற்பாடுகளை முன்னிறுத்தி செயற்பட்டு வந்துள்ளது.

இங்கு நிலத்தடி நீர் குறைவாக உள்ள நிலையில் நீர்த் தேவைகளினை பூர்த்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு 2009 முதல் இன்றுவரை இரண்டு பவுசர் வாகனத்தில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. சிறிய பவுசர் பழுதடைந்த நிலையில் 08.09.2019ல் புதிய பவுசர் கொள்வனவு செய்யப்பட்டது. 2019 காலப்பகுதியில் புதிய பவுசர் கொள்வனவு செய்யப்பட்டுடன் நீரின் மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானம் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி உதவியுடன் நீர் விநியோகத்தை இலகுபடுத்த குடிநீர் தாங்கிகளும் ஏற்படுத்தப்பட்டன. மழைநீர் சேகரிப்பு முறைகளையும்

**காரைநகர் அபிவிருத்திச் சபை**
மணற்காட்டு அம்மன் வீதி, காரைநகர், இலங்கை.
**KARAINAGAR DEVELOPMENT SOCIETY**
Manalkadu Amman Veethy, Karainagar, Sri Lanka.
Regd No. KR/AGA/SS/NGO/2006/02 Tel : 021 221 1757 E.mail : kdskarai@gmail.com

இச்சபை இனங்கண்டு மேற்கொண்டுள்ளது. வீட்டுத்திட்டம் பூர்த்தி செய்தல், வீடு புனரமைப்பு பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளது. காரைநகர் மேற்கு நீலங்காடு பகுதியில் வசிக்கும் பெண்தலைமைத்துவ குடும்பத்தின் வீட்டு திட்டம், காரை பெரியமணல் பகுதியில் அடிப்படை வலுவிழந்த ஒரு குடும்பத்தின் வீட்டுத்திட்டம், வியாவில் பகுதியில் ஒரு வீடு என்பனவும் 2020ம் ஆண்டுகளில் காரைநகர் அபிவிருத்தி சபை நிறைவேற்றிக்கொடுத்துள்ளது. இவற்றை கனடாவில் வதியும் தீசன் திரவியநாதன் ஊடாக காரை நியூஸ் இணையத்தள வாசகர்கள் அனுசரணையுடன் நிறைவேற்றி வழுங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கல்வி ஒரு மனிதனை பூரணமடையச் செய்கின்றது. இதனை கருத்தில் கொண்டு ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கு உபகரணம் வழுங்கல், போட்டிகைள நடாத்துதல், பாடசாலைகளிற்கான உபகரணம் வழுங்கல், முன்பள்ளி ஆசிரியர்களிற்கான சம்பள உயர்வு, முன்பள்ளி மாணவர்களுக்கு செயல்நூல் வழுங்கல், துவிச்சக்கர வண்டி வழுங்கல் போன்ற பல செயற்பாட்டை முன்நின்று நடாத்தப்படுகின்றது. தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. 2019இல் 12 மாணவர்களிற்கு 2500 ரூபா வீதம் வழங்கப்பட்டது. க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகளையும் அதிகூடிய சித்தி பெற்றோருக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது. கொரோனா காலத்தி கருத்தரகில் பங்குபற்ற உதவித்தொகை, திறன் பலகை அன்பளிப்பு செய்யப்பட்டது.
2021ம் ஆண்டில் நூலகத்திற்கு தேவையான பயிற்சி புத்தகம், போட்டோ கொப்பி இயந்திரம், கற்றல் உபகரணம், கணனி பயிற்சிகள் என்பவும் தனியார் நிறுவனமும் தனிப்பட்ட மக்களின் உதவியுடனும் வழங்கப்பட்டன.

கேணிகள் புனரமைப்பு செய்யப்பட்டு நன்னீராக்க வழிவகைகள் செய்யப்பட்டது. 2015இல் சடையாளி கேணி, சிவன்கோயில் பூந்தோட்ட கேணி, கந்தர் குண்டு, ஆலடி கேணி போன்றன புனரமைப்பு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கவொன்றாகும்.
சுகாதார சேவைகளிலும் அளப்பரிய பணியை காரைநகர் அபிவிருத்தி சபை மேற்கொண்டது. கொரோனா நிவாரணப்பணி, பொலித்தீன் பாதுகாப்பு(வைத்தியசாலை நிர்வாகத்தின் நலன்கருதி ), தொற்று நீக்கி இயந்திரம் கொரோனா காலத்தில் வழங்கியது. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் காணப்படும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்கின்றமை, இருதய சத்திர சிகிச்சை பிரிவிற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டமையும் சிறப்பான அம்சமாகும். கண்புரை சத்திர சிகிச்சைகளில் வறியவர் நலனை முதன்மைப்படுத்துவதும் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். கலாசாரத்தை எடுத்தியம்பும் முத்தமிழ் விழா, சபை நாட்காட்டி வெளியீடு, பஸ்தரிப்பு நிலைய புனரமைப்பு, நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம் அமைத்தல் போன்ற பல் பணிகளை மேற்கொள்கின்றது.

இவ்வாறான பணிகளை முன்னின்று நடாத்தும் சேவையாளர்களை ஊக்கப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு கௌரவிக்கப்படுகின்றனர். 2017ம் ஆண்டு 20 சேவையாளர்களையும் 2019ம் ஆண்டு 10 சேவையாளர்களையும் 2022இல் 5 சேவையாளர்களையும் கௌரவித்துள்ளதுடன் மேலும் தொடர்கின்றது. இடம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வழங்கப்படும் நிதி உதவிகள் தேவையறிந்து மக்களை சென்றடைய துணைபுரிகின்ற சேவையினையும் செய்கின்றது காரைநகர் அபிவிருத்தி சபை.



காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகத்தில் கடந்த காலத்திலும் இன்றும் சேவையாற்றி வரும் நிர்வாக சபை உறுப்பினர்கள் சிலர்...

காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாக அமைப்பு கடந்த காலங்களில் பல குழுக்களைக்கொண்டு சிறப்பாக இயங்கி வந்துள்ளது. இடர்பாடுகள் பல காணப்படினும் சாலை மேம்பாடு, குடியிருப்பு திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு,அபிவிருத்தி நலத்திட்டம், சூழல் பாதுகாப்பு போன்ற பல திட்டங்கள் மூலம் காரைநகர் பிரதேசத்தில் வேலை வாய்ப்பு, சுற்றுச்சூழல் மேம்பாடுகளில் காரைநகர் பிரதேசம் நன்மையடைய வேண்டும் என்ற எதிர்காலத்திட்டத்துடன் செயற்பட்டு காரை அபிவிருத்தி சபையின் செயற்பாடுகள் மேன்மை பெறவேண்டும் எனவும் விரும்புகின்றேன். நன்றி.

- பவதாரணி சத்தியநாதன்

# காரைநகர் இந்துக்கல்லூரி 1973 பொன்னகவை மாணவர்களின் கனவு நிஜமானது..!

**கா**ரைநகர் இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற 1973 மற்றும் 1974 ஜனவரி மாதம் வரை பிறந்து 1989ம் ஆண்டு கல்விப்பொது சாதாரணதரப் பரீட்சை எழுதி இடப் பெயர்வு காரணமாக இடம் பெயர்ந்த பழைய மாணவர்கள் 2023ம் ஆண்டு தமது 50வது பொன்ன கவை பிறந்த தினத்தை பயனுள்ள வகையில் சிறப்புற கொண்டாடி மகிழ்ந்தனர்.

அவர்களின் பிறந்தநாள் விழாக்கள் மற்றும் சிறப்பு ஒன்றுகூடல்களில் கலந்து கொண்ட பழைய மாணவர்கள் ஒன்றுகூடி தாம் படித்த பாடசாலையான காரை இந்துவிற்கு விஜயம் செய்ய தீர்மானித்தனர். அதன் பிரகாரம் 11.08.2023 அன்று ஒரு தொகை மாணவர்கள் தமது பாடசாலையான காரை இந்துவிற்கு விஜயம் செய்து ஒன்றுகூடி அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களை சந்தித்தனர். அன்றைய தினம் அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினருடன் தாம் படித்த பாடசாலையினையும் தமது வகுப்பறைகள் மற்றும் தமது ஞாபகங்களை மீட்டு நினைவு கூர்ந்தனர். அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன், பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.கணபதிப் - பிள்ளை நிமலதாசன், பொருளாளர் திரு.சண்முகம் சுகந்தன் ஆகியோர் பொன்னகவை மாணவர்களிற்கு பாடசாலையை சுற்றிக்காட்டியதுடன், பாடசாலையில் ஏற்பட்டுள்ள வகுப்பறை பற்றாக்குறை, விளையாட்டு மைதான புனரமைப்பு மற்றும் பல்வேறு தேவைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

பாடசாலையினை சுற்றிப்பார்த்த பொன்னகவை மாணவர்கள், தெற்குப்புற வளாகத்தில் நடராஜா ஞாபகர்த மண்டபத்திற்கு பின்னால் அமைந்திருந்த இரண்டு மாடிகளைக்கொண்ட 5 வகுப்பறைகளையும் மேல்மாடியில் பரீட்சை மண்டபத்தினையும் கொண்ட கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களது முயற்சியினால் 1967ம் ஆண்டு கட்டிக்கொடுக்கப்பட்டதுமான கட்டிடம் ஆபத்தானதாக கருதப்பட்டு கல்வித்திணைக்களத்தி னால் தடை செய்யப்பட்டிருப்பதை கண்டு கொண்டனர்.

அதுமட்டுமன்றி மீளகுடியேற்றத்தின் பின்னர் காரை - நகர் இந்துக்கல்லூரியில் காரைநகர் கல்விக்கோட்ட







பணிமனையானது காரை இந்துவின் முன்னைய வகுப்பறைகளில் இயங்கி வருவதும், அதன்காரண மாக வகுப்பறைகளிற்கான பற்றாக்குறை இருப்பதையும் கண்டு கொண்டார்கள். இந்த நிலையில் பாடசாலை யின் வடக்கு வளாக சயம்பர் சிலை பக்கமாக பார்வையிட்ட போது வடக்கு வளாகத்திலேயே அனைத்து வகுப்புக்களும் நடைபெற்று வருவதுடன் அந்த வளாகத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பக்கமா க இரண்டு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டிடங்கள் அண்மையில் அமைக்கப்பட்டிருந்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதி கட்டிடங்களை இணைக்கும் வகையில் வடகிழக்கு மூலையில் இரண்டு வகுப்பறை களை கட்டுவதற்கான போதிய இடவசதியும் இருப்பதை கண்டு கொண்டனர். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் அமைந்துள்ள இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டிடங்களையும் இணைத்து அழகான தொரு கட்டிட தொகுதியாக வடக்கு வளாகம் அமையும் என்பதனையும் கண்டு கொண்டனர்.





அதுமட்டுமன்றி மேற்படி வசதியாக உள்ள இடத்தில் இரண்டு வகுப்பறைகளை கட்டுவதற்காக 2020-2021 ம் ஆண்டு காலப்பகுதியில் தீர்மானித்திருந்த போதிலும் அதற்கான நிதியுதவி கிடைக்கப்பெறாத நிலையிலும், தொடர்ந்து இலங்கையில் நிலவிய பொருளாதார சீரற்ற தன்மை காரணமாகவும் பொருட்களின் விலை அதிக மானதாலும் அந்த திட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில் இருப்பதையும் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன் அந்த திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு 2021ம் ஆண்டு எடுத்துள்ளதாகவும் அதனை 2023ம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழா மலரில் பிரசுரித்திருந்ததாகவும் அதன் விபரங்களையும் ஆவணங்களையும் வழங்கியிருந்தனர். 75 இலட்சம் ரூபா வரை உத்தேச மதிப்பீட்டில் 2021ம் ஆண்டு திட்டமிடப்பட்ட இரண்டு வகுப்பறை மற்றும் அதற்குரிய தளபாட மற்றும் வசதிகளை உள்ளடக்கிய திட்டத்தினை தற்போதைய நிலவரப்படி, பழைய மாணவர் சங்கத்தின் நேரடி பணிகள் மூலம் 50 - 60 இலட்சம்

ரூபாய்கள் செலவில் கட்டிட பணிகளை மட்டும் நிறைவேற்றிக்கொள்ள முடியும் எனவும் அதற்கு பாட-சாலை நிர்வாகம் தம்மாலான நேரடி உதவிகளை வழங்கினால் சாத்தியமாகும் என பொன்னகவை மாணவர்களில் ஒருவரும் பொறியியலாளருமான திரு.இராமச்சந்திரன் விக்கினேஸ்வரன் அவர்கள் உறுதிபடக்கூறினார்.

அதனையடுத்து அன்றைய தினம் பாடசாலைக்கு விஜயம் செய்த பொன்னகவை மாணவர்கள் நிறைவேற்றி வழங்க உறுதிபூண்டனர்.11.08.2023 அன்று தமது பழைய ஞாபகங்களை மீட்டுப்பார்க்க சென்ற மாணவர்கள், முன்னேற்பாடுகள் எதுவும் இன்றி அன்றைய தினமே அத்திட்டத்தினை நிறைவேற்றி வழங்க வாக்குறுதியளித்தனர்.
அன்றைய தினமே 1973 நண்பர்கள் வட்டத்தைக் கொண்ட சமூகவலைத்தளம் ஊடாக அனைத்து நண்பர்களிற்கும் செய்திகள் பரிமாறப்பட்டு அனை-வரும் ஒருமுகமாக அத்திட்டத்தினை ஏற்றுக்கொண்ட - துடன் ஒரு சில வாரங்களில் காரை இந்து பழைய மாணவர் சங்க வங்கி கணக்கிற்கு தமது நிதியு-தவியினை நேரடியாக அனுப்பியும் வைத்தனர்.

அதனையடுத்து 23.08.2023 முன்னேற்பாடு இன்றி சுற்றிப்பார்க்க சென்ற 12வது நாளில் இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடி கட்டிடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. அத்திவாரம் இடப்பட்டு கட்டிட பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டன. மழைகாலம் மற்றும் காரைநகர் பிரதேச செயலக கட்டிட பணி மேற்பார்வை அலுவலர்களின் சில எதிர்பாராத தாமதங்கள் இருந்த போதிலும் 24.12.2023 அன்று முதலாவது தளத்திற்காக கொன்கிறீட் போடப்பட்டது. அதனைத்தொடர்ந்து தாமதங்கள் எதுவமற்ற வகையில் கட்டிடப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு 31.01.2024 கோப்புச வேலைகள் நிறைவு பெற்று 01.02.2024 கூரைகளிற்கான ஓடுகள் போடப்பட்டன.

திரு.ந.தம்பிராசா(காந்தி) தலைமையிலான கட்டிடப்பணியாளர்களும் ஆசாரியார் திரு.விஜயரத்தினம்(விஜயன்) தலைமையிலான அணியினரும் குறிப்பிட்ட குறுகிய காலப்பகுதியில் இரவு பகல் பாராது சிறப்பாக பணிபுரிந்ததன் காரணமாக 05.02.2024 அன்று திறப்பு விழாவிற்கான நாள் குறிக்கப்பட்டதுடன், கட்டப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டிடத்தைத்தை சூழஉள்ள பகுதிகள் மற்றும் அருகே அமைந்திருந்த கிணறு மற்றும் கழிப்பிடங்கள் புனரமைக்கப்பட்டு புத்தொளி வழங்கப்பட்டது.

பொன்னகவை மாணவர்களின் சிரமதான பணிகள் மூலமாகவும் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருந்து வருகை தந்திருந்த 8 மாணவர்கள் மற்றும் 30க்கும் மேற்பட்ட பொன்னகவை மாணவர்களின் நேரடி இடைவிடாத முயற்சிகளின் பயனாக 05.02.2024 அன்று வெகுவிமர்சையாக திறப்பு விழா நடாத்தப்ப - ட்டு இரண்டு மாடிகளைக்கொண்ட இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

13.08.2023 அன்று பாடசாலைக்கு விஜயம் செய்து 23.08.2024 அன்று அத்திவாரம் இடப்பட்டு 05.02.2024 வரையான ஐந்து மாத குறுகிய காலத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரந்து வாழ்கின்ற 1973 மற்றும் 1974 ஜனவரி வரை பிறந்து காரை இந்துவில் கல்விகற்ற பழைய மாணவர்கள் ஒற்றுமையோடு ஒருமித்து தமது பொன்னகவை ஆண்டு காலத்தில் பயனுள்ள வகையில், பலவித சவால்களிற்கு மத்தியில் சொல்லும் செயலும் ஒன்றாக 60 இலட்சம் ரூபா வரையில் திட்டமிடப்பட்ட கட்டிட பணிகளை 90 இலட்சம் ரூபாய்கள் வரை சென்ற போதிலும் நிறைவேற்றி வழங்கிய செயற்பாடானது காரை இந்து கல்விச்சமூகத்தை வியப்பில் ஆழ்தியது என்பது தெளிவானது.

இச்செயற்பாடுகளிற்கு பாடசாலை நிர்வாகம் சார்ந்து அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் கட்டிட பணியாளர்களது அர்ப்பணிப்பான செயற்பாடுகளும் பொன்னகவை மாணவர்கள் பல நாடுகளில் இருந்தும் பழைய மாணவர் சங்க கணக்கிற்கு அனுப்பப்படும் நிதியி-னையும் செலவு விபரங்களையும் பொன்னகவை மாணவர்கள் அடங்கிய சமூகவலை குழுமத்தில் உடனுக்குடன் அறியப்படுத்தி பொன்னகவை மாணவர்கள் தமது கனவை குறுகிய காலத்தில் நிறைவேற்ற அரும்பாடுபட்டவர்களாவர்.






05.02.2024 அன்று திறப்பு விழாவினை முன்னிட்டு 'நினைவழியா 73... பொன்னகவை மலர்' நினைவு மலர் வெளியிடப்பட்டதும், அன்றைய தினமே கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் வரவு செலவு அறிக்கையினை பொன்னகவை மாணவர்களிடம் சமர்ப்பித்தமையும் அனைத்திற்கும் மகுடம் வைத்தது போல் அமைந்தது.

1973 காரை இந்து பொன்னகவை மாணவர்களினால் கட்டப்பட்டு வழங்கப்பட்ட இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிட திறப்பு விழா காட்சிகள் 05.02.2024






















## 1973 காரை இந்து பொன்னகவை மாணவர்களினால் கட்டப்பட்டு வழங்கப்பட்ட இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிட பணிகள் தொடர்பான சில பதிவுகள்...



















